5



# தர்
# மொழிகள்

Q4
N56
59356

520
4-56

பொன்மொழி வரிசை—6

# புத்தர்

## பொன் மொழிகள்

தொகுத்தவர்: அரு. ராமநாதன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 NOV 1956
MADRAS

பிரேமா பிரசுரம்
சென்னை—24

விலை ரூ. 0—8—0

பிரேமா பிரசுரம்—18

முதற் பதிப்பு—ஆகஸ்டு, 1954
இரண்டாம் பதிப்பு—ஜூலை, 1956

பொன்மொழி வரிசை

தயாரிப்பு: அரு. ராமநாதன்


வெளிவந்தவை:

1. ஔவையார் பொன்மொழிகள்
2. விவேக சிந்தாமணி பொன்மொழிகள்.
3. பைபிள் பொன்மொழிகள்
4. திருக் குர்ஆன் பொன்மொழிகள்
5. பஞ்சதந்திரம் பொன்மொழிகள்
6. புத்தர் பொன்மொழிகள்
7. சங்கரர் பொன்மொழிகள்

59356

அட்டைப்படம்:
புத்தர் போட்டோ: என். ராமகிருஷ்ணு
வர்ண ஓவியம்; வி. சின்னையன்

அச்சிட்டோர்:
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-24


ஆணாயிருந்தாலும்
பெண்ணாயிருந்தாலும்,
எந்த ஜாதியைச்
சேர்ந்தவராயினும்,
எந்நிலையில் இருப்
போராயினும், போத
னையின்படி எவர்
நேர்மையுடன் நடக்
கிறார் களோ, எவர்
அதன் நிறைவில் வாழ்
கிறார்களோ, எவர்
கடமைகளைக் குறை
வறச் செய்கிறார்களோ,
அவரே உண்மையாக
என்னை மதித்து வழி
படுபவராவார்.
— புத்தர்

# குறியீட்டு விளக்கம்

ஒவ்வொரு பொன் மொழிக்கும் இறுதியில் தரப்பட்டுள்ள ஆதார எண் குறிப்புகளிலுள்ள எழுத்துக் குறியீடுகள் பௌத்தமத நூற்களைக் குறிக்கும். அவற்றின் விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| த. ப. | ... | தம்ம பதம் |
| தீ. நி. | ... | தீர்க்க நிகாயம் |
| ஸ. நி. | ... | ஸம்யுக்த நிகாயம் |
| ம. நி. | ... | மத்யம நிகாயம் |
| அ. நி. | ... | அங்குத்தா நிகாயம் |
| வி. பி. | ... | வினய பிடகம் |
| உதா. | ... | உதானவர்கம் |
| ஸு. நி. | ... | ஸுத்ர நிபாதம் |
| இதயு. | ... | இதயுக்தம் |
| கு. ப. | ... | குட்டக பதம் |

மனிதனாய் பிறப்பது அரிது; இந்த உலகில் வாழ்வது அரிது; நல்லறத்தைக் காது கொடுத்துக் கேட்பது அரிது; புத்த நிலை அடைவது எல்லாவற்றையும்விட அரிது!

எவனும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலைபெறவேண்டும்; பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்பட வேண்டும்! இத்தகைய அறிஞன் கலக்கமுறுவதில்லை!



உலகிற்கு முதன் முதலில் அகிம்சா தத்துவத்தைப் போதித்தவர் புத்தர். மனித ஜாதி அனைத்தும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகப் புதியதொரு மார்க்கத்தைக் கண்டுபிடித்தவர் புத்தர். அதற்காகவே, அரசகுமாரராய்ப் பிறந்தும், அரச போகத்தைத் துறந்து, மனைவி மகனைப் பிரிந்து, காடடைந்து கடுந்தவம் புரிந்து நாடோடியாக அலைந்தார்.

ஹிந்து மதத்தின் பெயரால் சாதிப்பிரிவினைகளும், யாகம் என்ற பெயரால் உயிர்ப்பலி

களும், சம்பிரதாயம் என்ற பெயரால் போலிச் சடங்குகளும், மூட நம்பிக்கைகளும் மிகுந்திருந்த அநாகரிக காலத்திலே, அவற்றை எதிர்த்து, சமதர்மத்தையும், ஜீவகாருண்யத்தையும், பெண்ணுரிமையையும், அறிவையும், அன்பொழுக்கத்தையும் வற்புறுத்திக் கூறி, பௌத்த சங்கத்தை ஸ்தாபித்தார். அதுவே, அவரது பெயரால் பௌத்த மதமாய் வளர்ந்தோங்கி நிற்கிறது.

பௌத்த மதம் அன்பு மதம். அறியாமைக்கு எதிராக அறிவை உபதேசிக்கும் மதம். சாதிப் பிரிவினைகளையும், பிறப்பால் ஏற்படும் உயர்வு தாழ்வுகளையும் உடைத்தெறியும் மதம்.

புத்தர் என்றால் பூரண ஞானம் பெற்றவர் என்று பொருள். புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தர். சித்தார்த்தர் என்றால் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியவர் என்று பொருள்.

2,500 வருஷங்களுக்கு முன், கபில வாஸ்து நகரில் சுத்தோதன மன்னருக்குக் குமாரராய் புத்தர் பிறந்தார். பிறந்த ஏழாவது

நாளில் தாயை இழந்தார். சிற்றன்னையால் அரச போகத்தில் வளர்க்கப்பட்டார். பத்தொன்பதாவது வயதில் மாமன் மகளும் மிக்க அழகு வாய்ந்தவளுமான யசோதரையை மணந்தார். அவளுடைய காதலில் சிலகாலம் தன்னை மறந்திருந்தார். அழகியதோர் பூந்தோட்டத்திலே, கோடைக் காலம், மாரிக் காலம், பனிக் காலம் ஆகிய மூன்று சீதோஷ்ண நிலைமைகளுக்கும் ஏற்றவாறு தங்கி இன்பம் அனுபவிப்பதற்குத் தகுதியாகக் கட்டப்பட்ட மூன்று மாளிகைகளிலே, எந்நேரமும் இன்பக் கேளிக்கைகளில் மூழ்கிக் கிடந்தார்.

ஒரு நாள், நகர் வலம் வரும் போது, மனித ஜாதி படும் துயர்களைக் கண்டார். ஒரு புறம் அரண்மனையிலே ஒரு சிலருக்குச் சுக வாசமும், இன்னொரு புறம் தெருக்களிலே வெகு பலருக்குத் துயர வாழ்வும் பசித் துன்பமும் இருப்பதைக் கண்டார். பிணி, மூப்பு, சாக்காடு—மனித ஜாதியைப் பீடித்திருப்பதையும் கண்டார். மூன்றிற்கும் காரணமான பிறப்பிலிருந்து விடுதலை பெற வழியுண்டா எனச் சிந்தித்தார். அந்தக் கேள்விக்குப் பழைய மதாச்சாரங்களில்

பதில் கிடைக்க வில்லை. அதனால் புதியதொரு மார்க்கத்தைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார். மனைவியும் மகனும் உறங்கும் நேரத்திலே அவர்களை விட்டுப் பிரிந்து, அரண்மனையை விட்டு வெளியேறி, இருபத் தொன்பதாவது வயதிலே துறவு பூண்டார். கானகத்தில் ஆறு வருஷகாலம் கடுந்தவமிருந்தார். அவருக்கு முப்பத்தைந்தாவது வயதில் புத்தகயையில் ஒரு அரச மரத்தடியில் ஞானோதயம் உண்டாயிற்று. மனிதர்களின் துக்கத்திற்குக் காரணம் பிறப்பு; பிறப்பிற்குக் காரணம் ஆசை; ஆசைக்குக் காரணம் அறியாமை—என்று கண்டார். ஆசைகளைத் துடைத்தெறிந்து நிர்வாணம் எனும் முக்தி நிலையை அடைந்தார். பிறகு, தான் கண்ட உண்மைகளை உலகிற்கு உபதேசித்துத் திரிந்து, கி. மு. 493-ல், எண்பதாவது வயதில் குசீநகர் என்னுமிடத்தில் உடலைவிட்டு மகாபரி நிர்வாணமடைந்தார்.

புத்தர் தம்உபதேசங்களில் எதையும் எழுதி வைக்கவில்லை. சீடர்களிடம் வாய் மொழிகளாகவே வழங்கிச்சென்றார். அவை பௌத்தத் திருமறை நூல்களில் உள்ளன. அவற்றி

லுள்ள அறிவுரைகளைப் பொறுக்கிப் பலவிதப் பொருட் பாகுபாட்டின்கீழ் பொன் மொழிக ளாகத் தொகுத்துத் தருகிறது இச்சிறு நூல்.



### அகத்தூய்மை

பூமியைப் போன்ற பொறுமையும், வீட்டுப் பேறு போன்ற உறுதிப் பாங்கும், சேறில்லாத தெளிந்த நீர் நிலை போன்ற அகத்தூய்மையும் உள்ளவனுக்கு ஜனனமும் இல்லை, மரணமும் இல்லை. த. ப. 95

ஓ, முட்டாளே! சடைத் தலையாலும், மான் தோல் ஆடையாலும் என்ன பிரயோஜனம்? நீ உன் வெளிப்புறத்தைத்தான் சுத்தம் செய்கிறாய்; உன் உட்புறத்தில் தீமைகள் நிறைந்த அசுத்தக் காடு இருக்கும்போது! த. ப. 394

### அகிம்சை

நேர்மையான அகிம்சை நெறியிலே பிறருக்கு வழி காட்டுபவனே அறத்தைக் காப்பவன்; அவனே மேதாவி; அவனே நீதிமான்! த. ப. 257

பிறரை இம்சை செய்யும் இச்சையனைத்தும் மறையும்போது, துக்கமும் தொலைந்துபோகிறது. த. ப. 390

### அஷ்டாங்க மார்க்கம்

சரியான நோக்கு; சரியான சங்கல்பம்; சரியான வார்த்தை; சரியான செய்கை; சரியான வாழ்க்கை;

சரியான முயற்சி; சரியான கருத்துடைமை; சரியான அமைதி.

### அஞ்சாமை

எவனுடைய சிந்தைகள் கலங்கிக் கிடக்காமலிருக்கின்றனவோ, எவனுடைய மனம் குழப்பமடையாதிருக்கிறதோ, எவன் புண்ணியத்தையும் பாபத்தையும் பற்றிச் சிந்திப்பதில்லையோ அவன் கவனத்தோடிருக்கும் வரை அவனுக்கு அச்சம் என்பதே இல்லை!

த. ப. 39

நற்காரியங்கள் செய்வதில் அஞ்ச வேண்டாம்; அது ஆனந்தத்திற்கு மறுபெயர். இதயுக்தம்-22

அஞ்ச வேண்டாத விஷயங்களுக்கு அஞ்சுபவர்கள்; அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சாதவர்கள்; இத்தகைய மனிதர்கள் தவருன கொள்கைகளைத் தழுவித் தீய பாதையில் செல்கிருர்கள். த. ப. 317

### அடக்கம்

உடலை அடக்கி, நாக்கை அடக்கி, மனதையும் அடக்கியுள்ள அறிவாளிகளே உண்மையான நல்லடக்க முள்ளவர்கள். த. ப. 234

### அடிமை

தீய ஆசைகளுக்கு அடிமைகளாகாதீர்கள்!

தீ. நி. ii

அடைக்கலம்

தனக்குத் தானே தலைவன்; தனக்குத் தானே அடைக்கலம். த. ப. 380

அமைதி

அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறெதுவுமில்லை. த. ப. 202

உண்மையான அறிவின் மூலம் மன விடுதலை பெற்றவனுக்கு மனதிலும் அமைதி இருக்கும்; சொல்லிலும் அமைதியிருக்கும்; செயலிலும் அமைதி இருக்கும். த. ப. -96

அரிது

மனிதனைப் பிறப்பது அரிது; இந்த உலகில் வாழ்வது அரிது; நல்லறத்தைக் காது கொடுத்துக் கேட்பது அரிது; புத்த நிலை அடைவது எல்லாவற்றையும் விட அரிது. த. ப. 182

அருகத்துக்கள்

அருகத்துக்கள் (பௌத்தத் துறவிகள்) எங்கே வசிக்கிறார்களோ, அது நாடாயினும், காடாயினும் பள்ளமாயினும் மேடாயினும், அதுவே மனோகரமான இடம். த. ப. 98

அவலட்சணம்

அவலட்சணத்தின் மீது சிந்தனை செலுத்து! காமம் மடிந்து போகும். ம. நி. I

### அழகு

எவன் குற்றமற்ற மேதையோ, அவனே உண்மையான அழகுள்ளவன். த. ப. 263

### அறபோதனை

அறநெறிப் போதனைகளைக் கேட்டறிந்த அறிவாளிகள் ஆழமாகவும் தெளிவாகவும் அமைதியாகவுமுள்ள குளத்தைப் போல் சாந்தி நிலை பெறுகிறார்கள். த. ப. 82

### அறவழி

அறவழியில் நடப்பவனுக்கு இந்த உலகிலும் ஆனந்தம், மறுவுலகிலும் ஆனந்தம்! த. ப. 168

இந்த மண் பூமியையும், எமனின் மரண பூமியையும், கடவுளரின் தேவ பூமியையும் வெற்றி கொள்பவன் யார்? பழக்கமுள்ள புத்திசாலி, சரியான புஷ்பத்தைக் கண்டு பிடித்து விடுவதுபோல, தெளிவாகக் காட்டப்பட்டுள்ள அறவழியைக் கண்டு பிடிப்பவன் யார்? த. ப. 44

அறத்தை அருந்துபவன் தெளிந்த சிந்தனையுடன் சுகமாய் வாழ்கிறான்; சான்றோர் அறிவுறுத்திய அறவழியில் அவன் எப்போதும் ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். த. ப. 79

இரும்பிலிருந்தே துரு தோன்றினாலும், இரும்பை அந்தத் துருவே அரித்துத் தின்று விடுகிறது. அது

போலவே, அறநெறியிலிருந்து தவறியவனை, அவனுடைய செயல்களே நாளுக்கு நாள் அழிவை நோக்கி நடத்திச் செல்கின்றன. த. ப. 240

அறிஞர்

மனிதர்களில் அறிவுக் கண் உள்ளவனே சிறந்தவன். த. ப. 273

அதிகமாகப் பேசுவதினுல் மட்டும் ஒருவன் அறிஞனல்ல. த. ப. 258

முட்டாள் தன் முட்டாள்தனத்தை உணர்வானேயாகில், அந்த அளவிற்கு அவன் அறிவாளி! ஆனால் தன்னைப் பாண்டித்தியமுள்ள அறிஞனாக எண்ணிக் கொள்பவனே அடிமுட்டாளாவான்! த. ப. 63

நின்னை ஒரு தற்காப்புத் தீவாகத் தயாரித்துக்கொள்; விரைவில் முயற்சி செய்; அறிஞனாய் இரு. த. ப. 236

அறிவாளிகள் எதன் மீதும் இச்சை வைப்பதில்லை; இன்பங்களை விரும்பிக் கூச்சலிடுவதில்லை; சுகமோ, துக்கமோ எதுவந்தாலும் எழுச்சி யடைவது மில்லை, அயர்ந்து விடுவதுமில்லை. த. ப. 83

அம்பை நேராக நிமிர்த்துபவர்கள், வில்லாளிகள்! மரத்தில் (சித்திரங்கள்) பொறிப்பவர், தச்சர்கள்! தம்மைத் தாமே அடக்கியாள்பவர், அறிஞர்கள்!
த. ப. 80

அறிவாளி, இருண்ட மார்க்கத்தை நீக்கி, ஒளி மயமான மார்க்கத்தில் செல்வானாக. த. ப. 87

நாக்குக்கு குழம்பின் சுவை தெரியும். அதுபோல கருத்துள்ளவன் அற்ப நேரமே அறிஞரோடு பழகினாலும் அறவழியின் தன்மையை அறிந்து கொண்டு விடுகிறான். த. ப. 65

அகப்பைக்குக் குழம்பின் சுவை தெரியாது. அது போல, மூடனொருவன் வாழ்நாளெல்லாம் அறிஞரோடு பழகினாலும், அறத்தை அவன் அறிவதில்லை.

த. ப. 64

அறிவாளி ஒருவன் தன்னை விழிப்புற்றெழுச் செய்வதினாலும், கருத்து முயற்சியினாலும், தன்னடக்கத்தினாலும், நிதானத்தினாலும், ஒழுக்கத்தினாலும், தன்னை எந்த வெள்ளத்தாலும் மூழ்கடிக்க முடியாத ஒரு தீவு ஆக ஆக்கிக் கொள்ளலாம்.

த. ப. 25

முட்டாள்கள் சோம்பேறித் தனத்தின் வெறும் மனப் பிரமைகளையும் தீய அறிவு படைத்தவர்களையும் பின்பற்றுகிறார்கள். அறிவாளியோ தன்னுடைய கருத்து முயற்சியையே தன்னுடைய அதி உன்னதமான ரத்தினம் போல் பாதுகாத்து வருகிறான். த. ப. 26

கற்றுத் தேர்ந்த அறிவாளி ஒருவன், தன் கருத்து முயற்சியினால் சோம்பேறித் தனத்தின் வெறும்

பிரமைகளை விரட்டித் தள்ளி விட்டு, அறிவு எனும் கோபுரத்தின் உச்சி மீது ஏறி நிற்கும்போது கீழே உள்ள முட்டாள்களைப் பார்க்கிறான். கீழே சம வெளியில் ஆறுக் கவலைகளுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஜனக் கும்பலை மலை உச்சி மீது ஏறி நிற்பவன் அமைதியாகப் பார்ப்பது போலவே அவன் மற்றவர்களைப் பார்க்கிறான். த. ப. 28

அறியாமை

மலங்கள் அனைத்திலும் மிகப் பெரியதொரு மலம் உண்டு—அறியாமையே அந்த மலம்!

த. ப. 243

அறிவாற்றல்

அறிவாற்றல் அடைந்தவனுக்கு எல்லாவிதப் பந்தங்களும் அறுந்து விடுகின்றன. த. ப. 385

அறிவு

அறியாமையுடன் தன்னடக்கமில்லாமல் ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட, அறிவுடன் தன் நினைவோடு ஒருவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது த. ப. 8—111

ஒருவனின் சிந்தனைகள் நிலையற்றனவாக இருந்தால், உண்மையான அறநெறியை அவன் அறியாதவனாயிருந்தால், அவனுடைய மன அமைதி குழம்பிக் கிடந்தால், அவனுடைய அறிவு என்றுமே பரிபூரணமடைய முடியாது. த. ப. 14 vi

அற்புதச் சித்துகள்

[பிக்ஷுகள் தமக்குக் கிடைத்த இருத்தி சக்தியை நிர்வாண மடைவதற்கு உபயோகப் படுத்தவேண்டுமே தவிர, உலகத்தார் வியந்து மதிக்கவேண்டுமென்பதற்காக நம்பமுடியாத ஆச்சரியமான காரியங்களையும் அதீத ஜால வித்தைகளையும் செய்து காட்ட முயலக்கூடாது என்பது புத்தரின் கருத்து. முனிவர்கள் அற்புதமான சித்துகள் செய்வதினால் எந்தவிதப் பயனுமில்லை என்றும் கருதினார்.]

அன்பு

அந்தரங்கத்திலும் வெளிப்படையிலும், அன்பான செயல்கள், அன்பான வார்த்தைகள், அன்பான எண்ணங்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வாருங்கள்.
தி. நி. ⁱ

ஆசை

ஆசைகளுக்குச் சமமான நெருப்பு வேறெதுவுமில்லை.
த. ப. 202

வயல்களுக்குக் கேடு, களைகள்! மனித ஜாதிக்குக் கேடு, ஆசைகள்!
த. ப. 356

ஆசையினால் தூண்டித் தள்ளப்பட்ட மனிதர்கள், வேட்டையில் விரட்டப்பட்ட முயல்களைப்போல் அங்குமிங்கும் ஓடித் திரிகிறார்கள்.
த. ப. 342

எவனைக் கொடிய நஞ்சுபோன்ற ஆசை பிடித்துக்

கொள்கிறதோ, அவனுக்குத் துக்கம் காட்டுப் புல்லைப் போல மேலும் மேலும் வளர்ந்து பெருகிக் கொண்டேயிருக்கும். த. ப. 335.

நன்கு வேயப்பட்ட கூரை வழியாக மழைநீர் உடைத்துக்கொண்டு வீட்டினுள்ளே புகமுடிவதில்லை. அதுபோல நன்கு சிந்தனைப் பிரதிபலிப்பு வாய்க்கப்பெற்ற மனதின் வழியாக எந்தவித ஆசை வெறியும் உடைத்துக்கொண்டு உள்ளே நுழைய முடிவதில்லை. த. ப. I—14

ஒரு மரத்தை மட்டும் வெட்டினால் போதாது! ஆசைக்காடு முழுவதையுமே வெட்டி எறியுங்கள்! ஆசைக்காட்டிலிருந்தே அபாயம் வருகின்றது. காட்டையும் அதனடியில் வளர்ந்திருக்கும் புதர்களையும் வெட்டியெறிந்து விட்டால் அதன் பிறகு ஓ பிக்ஷுக்களே, நீங்கள் காட்டிலிருந்து விலகி விடுதலை பெறுவீர்கள்! த. ப : 283.

வீட்டைக் கட்டிய *கொற்றனே! இப்போது உன்னைக் கண்டுபிடித்து விட்டேன்! வீட்டை மறுபடி நீ கட்டமுடியாது! நின் உத்திரங்களெல்லாம் உடைந்துவிட்டன; வீட்டின் கூரையும் சிதறி விட்டது! என் சித்தம் நிர்வாணத்தில் லயித்து விட்டது; மனசின் ஆசைகளெல்லாம் மடிந்து போயின. த. ப. 154.

* ஆசையாகிய கொற்றன்

### ஆசைவலை

சிலந்தி, தான் பின்னிய வலைக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதுபோல, ஆசைகளுக்கு இணங்கியவர்கள் ஆசைகளின் வெள்ளப்போக்கிலே நீந்திக்கொண்டிருக்கிறார்கள். அறிவாளிகளோ இந்த ஆசை வலையை அறுத்துக் கொண்டு கவலைகளிலிருந்தும், துக்கங்களிலிருந்தும் விடுபட்டுச் செல்கிறார்கள். த. ப. 347

### ஆத்மா

[ஆத்மாவைப்பற்றியும் பிரும்மத்தைப்பற்றியும் வாதாடுவதைக் காட்டிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் உலகின் துன்பம் குறையுமென்று புத்தர் கருதினார். இதனால் புத்தரை அநாத்மவாதி யென்றும் நாத்திகர் என்றும் கூறுவார் உண்டு.]

### ஆரோக்கியம்

ஆரோக்கியந்தான் பெரும் இலாபம்! த. ப. 204

### ஆனந்தம்

தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும் செயல் புரிந்தாலும், அவனைவிட்டு விலகாத நிழல்போல், ஆனந்தம் அவனைப் பின்பற்றிச் செல்லுகிறது. த. ப. 2

மோக சுகங்களைக் கைவிட்டு, எதையும் தனக்குச் சொந்தமானதென்று கருதாமல் அறிவாளியானவன் தன் மனமாசுகளை அகற்றிவிடவேண்டும். அப்போது அவன் ஆனந்தத்தைக் காண்பான்.

த. ப. 88

சோம்பேறித் தனத்தின் வெறும் மனப் பிரமைகளையோ, புலன் இச்சைகளின் இன்பத்தையோ, ஆசையாகிய காம அனுபவங்களையோ பின்பற்ற வேண்டாம். கருத்து முயற்சியும் சிந்தனை ஒருமிப்பான தியானமும் உள்ளவனே எல்லையற்ற ஆனந்தத்தை அடைகிறான்.

த. ப. 27.

### இசை

இசை என்பது துயர ஓலம்! அ. கி. i - 261

### இடம்

கவனமும், குணமும், புகழும், பணமும் உள்ளவன் எந்த இடத்தில் தங்கியிருந்தாலும் அங்கே போற்றப்படுகிறான்.

த. ப. 303

### இருதயம்

உலக விஷயங்களால் தீண்டப்படாத இருதயம்; துக்கத்தினால் சுழற்றப்படாத இருதயம்; ஆசைகளற்றுப் பத்திரமாக இருக்கும் இருதயம் – இதுதான் மாபெரும் நற்பாக்கியம்.

ஸூத்ர நிபாதம். ப். ப். 268

## இளமை

இளமையிலே பிரும்மசரியத்தைக் கைக்கொள்ளாதவரும், பொருள் தேடிக் கொள்ளாதவரும், உளுத்துப் போன விற்களைப்போலப் பழமையை நினைத்து நினைத்து ஏங்கித் தவிப்பார்கள்.

த. ப. - 156

## இனிது

தேவையேற்படும்போது நண்பர்கள் கிடைப்பது இனிது; ஒரு பக்ஷமாயிராத திருப்தி இனிது; சாவு நேரத்தில் (முன் செய்த) நற்செயல்கள் இனிது; துக்கமனைத்தையும் நீத்துவிடுவது இனிது.

த. ப. 331

வயோதிக வயது வரை ஒழுக்கம் நிலைத்திருப்பது இனிமையானது; [அறவழியில்] உறுதியான நம்பிக்கை கொள்வது இனிமையானது; அறிவை அடைவது இனிமையானது; தீச் செயல்களை விலக்குவது இனிமையானது.

த. ப. 333

## இன்பக் கேளிக்கை

இன்ப கேளிக்கை ஒன்றிற்காகவே வாழ்ந்து திரிபவனை, தன் மோக உணர்ச்சியைக் கட்டுப்படுத்தாமலும், உணவு விஷயத்தில் மிதமாயிராமலும், சோம்பிப் பலஹீனமாய்த் திரியும் ஒருவனை, பலஹீனமான மரத்தைச் சூரைக் காற்றனது அடியோடு பிய்த்துக்

கீழே விட்டெறிந்து விடுவதைப்போல, மாரன் தூக்கி யெறிந்து விடுவது சர்வ நிச்சயம்.
த. ப. - 7

இன்ப துன்பம்

இன்பத்தையோ துன்பத்தையோ எவனும் கைப் பற்றிக் கொண்டிருக்கவேண்டாம், இன்பத்தைக் காணவிட்டாலும் துக்கம் : துன்பத்தைக் கண்டாலும் துக்கம்.
த. ப. 210

இன்பம்

அற்ப இன்பத்தைத் துறப்பதால் பெரும் இன்பத் தைக் காணலாம்.
த. ப. - 290

நல்ல பண்புள்ள மனிதன் இந்த உலகில் இன்பமா யிருக்கிறான்; மறுமையிலும் இன்பமாய் இருக்கிறான்; இரண்டிலும் அவனுக்கு இன்பமே. தான் செய்த நல்ல காரியத்தை நினைக்கும்போது இன்புறுகிறான்; நல்ல பாதையில் செல்லும்போது இன்னும் அதிகமாய் இன்புறுகிறான்.
த. ப. - 18

ஈகை

கருமிகள் தேவ உலகை அடைவதில்லை; மூடர்கள் ஈகையைப் போற்றுவதில்லை:
த. ப. - 177

உடல்

'நான்' என்பது உடல் அல்ல.

வினய பிடகம் 1. 6

மண், தண்ணீர், நெருப்பு, காற்று—இவற்றின் மூலாம்சங்கள் இந்த உடலில் இருக்கின்றன.

உடலோடு வாழ்வதற்குச் சமமான துயரம் வேறெதுவுமில்லை.
த. ப. 202

இந்த உடலாகிய வர்ணம் பூசிய பொம்மையைப் பார்! இது புண்கள் நிறைந்தது; பிணிகளுக்கு இடமானது; பலவித எண்ணக் கலவைகளை உடையது; ஆனால் நிலையற்றது.
த. ப. 147

இந்த உடல்—எலும்புகளைக் கொண்டு எழுப்பப் பட்ட கட்டிடமாய் ஊனும் உதிரமும் கலந்து சாந்தாய்ப் பூசப்பட்டிருக்கிறது; இந்த மாளிகையிலே, மூப்பும், மரணமும், மமதையும், வஞ்சகமுந்தான் வசிக்கின்றன.
த. ப. 150

ஐயோ! வெகு சீக்கிரத்தில் இந்த உடலானது எரிந்து உபயோகமற்றுப்போன மரக்கட்டைபோல் உணர்ச்சியற்று அருவருக்கப்பட்டு, மண் தரை மீது கிடக்கும்!
த. ப. 41

## உதவி

உங்களுக்கு உதவி நீங்களே!

முட்டாளின் துணை உதவியாகாது
த. ப. 61

நல்ல வழியில் நன்கு நிர்வகிக்கப்பட்ட நம் மனந் தான் நமக்கு மாபெரும் உதவி செய்யும். தாயோ

அல்லது தந்தையோ அல்லது எந்த உறவினருமோ அவ்வளவு தூரம் உதவி செய்ய முடியாது.

த. ப. 43-Iv

உபசாந்தி

ஓ, பிக்ஷுகளே! உடலிலும் உள்ளத்திலும் பேச்சிலும் அமைதியுடன் எவன் ஒவ்வொரு வழியிலும் தன்னை நன்கு கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறானோ எவன் இந்த உலகின் ஆசைகளை உதறித் தள்ளி விடுகிறானோ அவனே 'உபசாந்தி பெற்றவன்' என அழைக்கப்படுவான்.

த. ப. -378

உபதேசம்

எவனும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலைபெற வேண்டும்; பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்பட வேண்டும்! இத்தகைய அறிஞன் கலக்க முறுவதில்லை.

த. ப. 158

['எந்தவிதத் தீச்செயலிலிருந்தும் விலகியிரு; அறமானதில் நிலைத்திரு; உன் சொந்தச் சிந்தனைகளைச் சுத்தப் படுத்து'—இதுவே புத்தருடைய உபதேசம்.]

த. ப. 185

'நிந்தனை செய்யாதே; பிறருக்குத் தீமை செய்யாதே; அறநெறிக்குக் கட்டுப்பட்டு வாழ்; மிதமாகச் சாப்பிடு; ஏகாந்தமாய் உறங்கு; ஏகாந்தமாய் அமர்ந்திரு; எண்ணங்களை அலையவிடாமல் உயர்ந்த சிந்

தனை லயத்தில் ஒருமைப் படுத்து'—இதுவே புத்தர் உணர்த்தும் உபதேசம்.
த. ப. 185

### உலக இயற்கை

இருட்டு தான் இந்த உலகத்தின் இயற்கை, இங்கே வெகு சில பேரே (கண் விழிப்புற்று) உண்மையை ஊடுருவிக் காண முடியும்.
த. ப. 174

### உலகம்

உலகத்தோடு நான் சச்சரவிடவில்லை; உலகந்தான் என்னோடு சச்சரவிடுகிறது.
ஸ. நி. iii-94

### உறுதி

பாறைகள் மயமான மலையை எவ்வளவு பெரிய சூறைக் காற்றும் அசைத்தெறிய முடிவதில்லை. அதைவிட, இன்பக் கேளிக்கைகளை எதிர்பாராமல் வாழ்ந்து வருபவனை, தன் புலன் உணர்ச்சிகளை நன்கு கட்டுப்படுத்தி, உண்பதில் மிதமாகவும், விசுவாசமும் உறுதியும் நிறைந்திருப்பவனை மாரனால் முறியடிக்க முடிவதில்லை.
த. ப. 8

### ஊக்கம்

ஒருவன் எதையாவது செய்ய வேண்டுமென்றால், அதைத் தளராத ஊக்கத்தோடும் உறுதியோடும் செய்யட்டும். சிரத்தையற்ற துறவியோ தன் ஆசைப் புழுதிகளையே தன் மீது அதிகமாகத் தூவிக் கொள்கிறான்!
த. ப. 313

### எண்ணம்

தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயலில் இறங்கினாலும், வண்டியை இழுக்கும் மாட்டின் காலை வண்டிச் சக்கரம் பின்பற்றிச் செல்வதுபோல, துன்பம் அந்த மனிதனைப் பின்பற்றிச் செல்கிறது.

த. ப. 1

### எதிர் நீச்சல்

எவன், வார்த்தைக்கு எட்டாத நிர்வாணப் பேற்றிற்காக ஆவல் கொண்டவனோ, எவன் அக நிறைவு கொண்டவனோ, எவனுடைய எண்ணங்கள் இனி ஆசைகளால் கிழிக்கப்படவில்லையோ, அவனே ஆற்று வெள்ளத்தை எதிர்த்து ஏறுபவன். (உலகப் போக்கிற்கு எதிர் நீச்சலடிக்கிறவன்.) த. ப. 218

### எல்லையற்றது

கண் விழித்திருப்பவனுக்கு, இரவு நீண்டது; களைத்திருப்பவனுக்கு, வழி வெகு தூரம்; நல்லறத்தை அறியாத மூட்டாள்களுக்கு (பிறப்பு - இறப்பாகிய) ஸம்ஸாரத் தொடர் எல்லையற்றது! த. ப. 60

### ஏகாங்கி

ஏகாங்கியாக வாழ்; எந்தத் தீமையும் செய்யாமல், ஏகாங்கியாக வாழ், குறைவான தேவைகளுடன். த. ப. 330

### ஒட்டாத உறவு

தாமரை இலை மீது தண்ணீர் போலவும், ஊசி முனை மீது கடுகு போலவும் இன்ப சுகங்களில் ஒட்டிக் கொள்ளாமல் எவனிருக்கிறானோ அவனையே பிராமணன் என்பேன். த. ப. 401

### ஒழுக்கம்

வான வீதியிலே பாதை இல்லை ; அதுபோல், சமணனின் ஒழுக்கம் புறத்திலே இல்லை. த. ப. 254

### கடமை

எவ்வளவுதான் உயர்ந்ததேயானாலும் பிறருடைய கடமைக்காகத் தன்னுடைய கடமையைக் கைவிடலாகாது. த. ப. 166

### கடவுள்

[கடவுள் உண்டு என்றோ, ஆத்மா உண்டு என்றோ உறுதி கொள்வதும் அவற்றின் தத்துவங்களை ஆராய்வதுந்தான் நல்லொழுக்கத்திற்கு ஆதாரம் என்று புத்தர் உறுதியாகக் கருதியவரல்ல. கடவுளைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் எவரும் எதுவும் அறிய முடிவதில்லையாதலால் அவைபற்றிய ஆராய்ச்சி தேவையில்லை எனப் புத்தர் கருதி இருக்கலாம்.]

கணவன் மனைவி

மனைவியிடம் மதிப்புக் காட்டுவது; அவளோடு இணங்கியிருப்பது; பரஸ்திரியை நாடாதிருப்பது! மனைவியிடம் பொறுப்புக் கொடுப்பது; அவளுக்கு ஆடையணிகள் தருவது—இந்த ஐந்து வழிகளின் மூலம் மனைவியைக் கணவன் போற்றுதல் வேண்டும்;
தீ. நி. iii

மனைவி, தன் கடமைகளைச் சரிவரச் செய்வது; தன் குடும்பத்தை நல்லபடி நடத்துவது; கற்பு கெடாதிருப்பது; கணவன் சம்பாதிப்பதைக் காப்பது; எல்லாவற்றையும் திறமையோடும் உற்சாகத்தோடும் செய்வது — இந்த ஐந்து வழிகளின் மூலம் தன் கணவன் மீதுள்ள வாஞ்சையைக் காப்பாற்றுகிறாள்.
தீ. நி. iii

கண்ணீர்

நீ வடிக்கும் கண்ணீர்தான் பெரிது; நான்கு பெருங்கடல்களின் தண்ணீர் அல்ல! ஸ. நி. ii 178

கருத்துடைமை

கருத்து முயற்சியினால்தான் தேவேந்திரன் தேவர்களுக்கெல்லாம் தலைவனாக உயர்ந்தான். கருத்து முயற்சியையே ஜனங்கள் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். கருத்தற்ற அறியாமையோ எப்போதும் இகழ்வே படுகிறது.
த. ப. II—3

கர்மகாண்டம்

[சரியை, கிரியை, பூஜை, யாத்திரை முதலிய கர்ம காண்டத்தினல் பலனில்லை என்பது புத்தரின் கருத்து.]

கர்மானுஷ்டானங்கள்

[அக்னி பூஜையையும், கடுந்தபஸ்களையும் விரதானுஷ்டானங்களையும் கடைப் பிடிப்பதினல் உலக பந்தத்தில் கட்டுண்டு துக்கந்தான் அதிகரிக்குமே தவிர, அவற்றினல் பலனில்லை; அத்தகைய கர்ம மார்க்கத்தை விட்டுவிட்டு நிர்வாணமார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டும் என்பது புத்தரின் கருத்து]

கவலை

கவலையால் நைபவர்களிடையே நாம் கவலையின்றி ஆனந்தமாய் வாழ்கிறோம். த. ப. 199

கவிதை

அர்த்தமற்ற சொற்களால் ஆக்கப்பட்ட கவிதை ஆயிரமாயிருந்தாலும், அர்த்தமுள்ள கவிதையின் ஒரே சொல்லே மேலானது; அதைக் கேட்பவன் மன அமைதி பெறுகிருன்! த. ப. 3—101

காமம்

காமத்திலிருந்து சோகம் பிறக்கிறது.

த. ப. 215

குரு

நான் உங்களைவிட்டுப் போன பிறகு, என்னால் பயிற்றுவிக்கப்பட்ட போதனையும் சங்கமுமே உங்களுக்குக் குரு. தீ. நி. ii—154

குருதரிசனம்

['உத்தமமான மருந்துகளால் வியாதி நீங்கிவிடும். அவைகளைச் செய்து கொடுக்கும் வைத்தியனை நோயாளி தரிசிக்கவேண்டுமென்ற அவசியமில்லை...... என் உபதேசங்களை மனப்பூர்வமாகக் கொண்டு அவற்றைக் கூடியவரையில் அனுஷ்டிக்காதவன் என்னைத் தரிசித்தவனல்ல'—குரு தரிசனமும் குரு பூஜையும் தேவையல்ல என்பது புத்தரின் கருத்து.]

குலம்

பிறப்பினால் மட்டும் ஒருவன் இழிந்த குலத்தவனாகி விடமாட்டான்; நடத்தையினால்தான் ஒருவன் இழி குலத்தவனாகிறான். வாஸல ஸுத்ரம்

குறைகாணல்

பிறரிடம் குறைகண்டு பிடிப்பது வெகு சுலபம்; ஆனால் தன் குற்றத்தைத் தானே அறிவதுதான் வெகு சிரமம். த. ப. 252

குறைகூறல்

பிறரின் குறைகளிலே நாட்டம் கொண்டு எப்போ

தும் புறம் கூறிக்கொண்டே யிருப்பவன் தன் குறைகளைத்தான் வளரவிடுகிறான். த. ப. 253

குறைபாடு

மந்திரத்தின் குறை பாராயணம் செய்யாதிருத்தல்; வீட்டின்குறை பழுது பாராதிருத்தல்; அழகின் குறை சிரத்தை யில்லாதிருத்தல்; காவலனின் குறை கவனமில்லாதிருத்தல். த. ப. 241

கூட்டுறவு

தீயவர்களோடு தோழமை வேண்டாம்; கயவர்களோடு கூட்டுறவுவேண்டாம்; ஒழுக்கமுள்ளவரோடு உறவாடுக; அறிவாளர்களின் சகவாசத்தைக் கைக்கொள்க. த. ப.—78

முட்டாள்களின் கூட்டுறவு பகைவருடன் பழகுவதுபோல் எப்போதும் துயரந்தான். அறிஞர்களின் கூட்டுறவோ சுற்றத்தார்களோடு பழகுவதைப்போல எப்போதும் ஆனந்தம் தரும்! த. ப. 207

கேடு

எவனும் தானே தனக்குக் கேடு தேடிக் கொள்கிறான். த. ப.—165

பெண்ணுக்குக் கேடு தீய நடத்தை; கொடை வள்ளலுக்குக் கேடு கருமித்தனம். த. ப. 242

### கொல்லாமை

மற்ற ஜீவன்களைத் தன்னைப் போலக் கருதி ஒருவனும் கொல்லக் கூடாது; கொலைக்கு இசையவும் கூடாது. த. ப. 129

### சகிப்புத் தன்மை

தான் ஒரு குற்றமும் செய்யாதிருந்தும், தனக்குக் கிடைக்கும் நிந்தனையையும், அடிகளையும், சிறைத் தண்டனையையும் தாங்கிக் கொண்டு, சகிப்புத் தன்மையையே தன் சக்தியாகவும், பலங்களையே தன் சேனைகளாகவும் எவன் பெற்றிருக்கிறானோ, அவனையே பிராமணன் என்பேன். த. ப. 399

### சத்தியங்கள் நான்கு

சத்தியங்களில் நான்கு சொல் சத்தியமே சிறந்தது. [துக்கம்; துக்க காரணம்; துக்க நிவாரணம்; துக்க நிவாரண மார்க்கம் என்பனதாம் நான்கு உண்மைகள்.]

த. ப. 273

(இவற்றைப்பற்றி அந்தந்தத் தலைப்புகளின் கீழ்காண்க.)

### சந்தித்தல்

நீங்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் இந்த இரண்டில் ஒன்றைச் செய்வீராக; தூய்மையான பேச்சில் ஈடுபடுங்கள் அல்லது மௌனம் காத்திருங்கள். உதாரண வர்கம். ii

சமத்துவம்

சமத்துவ நிலைச் சாதனையைப் பயில்வாயாக; அதனால் எதிர்ப்புணர்ச்சி யெல்லாம் கைவிடப்படும்.

ம. நி. i

சாதி

[ஆறுகள் மாபெரும் கடலில் கலக்கும்போது அவற்றின் பெயர்கள் மறைந்து விடுவது போல், பௌத்த தர்மத்தில் கலக்கும்போது நான்கு சாதிகளும் குலம் கோத்திரங்களும் அழிந்துவிட வேண்டும் என்பது புத்தர் கருத்து]

[புத்தரின் சிஷ்யர்களில் ஒருவனை உபாலி ஜாதியில் நாவிதன்; ஆனல் தன்னுடைய அறிவின் மிகுதியால் பௌத்த ஞானிகளுக்குள்ளே மிகவும் கௌரவமடைந்தவன்.]

நான் சம்பூரண ஞானத்தை அடையும் முன் (இடைச்சி ஸுஜாதை) தந்த உணவும், நான் நிர்வாணத்தை யடைந்து இவ்வுலகை விட்டுப் போகும் முன். [கம்மாளன் சந்தன்] கொடுத்த உணவும் எல்லாவற்றிலும் மேலானவை; ஒரே மாதிரிப் பயனுள்ளவை.

தீ. நி. ii 135-6

[பௌத்த சங்கத்திற்குள் ஜாதி பேதங்கள் இல்லை. நிர்வாண சித்திக்குரிய வழி, உயர்ந்த ஜாதியனுக்கும் தாழ்ந்த ஜாதியனுக்கும் சண்டாளனுக்கும் ஒரே

மாதிரியாகத் திறந்துள்ளது என்பது புத்தரின் போதனை]

சிந்தனை

"மாரிக்காலத்தில் இங்கு வசிப்பேன்; கார்காலத்திலும் இங்கு வசிப்பேன்!" என்றெல்லாம் மூடன் சிந்திக்கிறான்; தன் சாவைப்பற்றிச் சிந்திப்பதில்லை!

த. ப. 286

அறிவாளி தன் மனச் சித்தங்களைக் காத்து வருவானாக. ஏனெனில், அவை ஊடுருவி அறிவதற்கு அரிதானவை, தந்திர நுட்பம் வாய்ந்தவை; மனம் போன போக்கெல்லாம் பாய்ந்து திரிபவை. நன்கு பாதுகாக்கப் பெற்ற சிந்தனைகள் ஆனந்தத்தைக் கொண்டு வருகின்றன. த. ப. 10 - 36

நன்கு வேயப்படாத கூரையின் வழியாக மழை நீர் உடைத்துக்கொண்டு வீட்டினுள் புகுந்து விடுகிறது. அது போல, நன்கு சிந்தனைப் பிரதிபலிப்பு இல்லாத மனதின் வழியாக ஆசை வெறியானது உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து விடுகிறது.

த. ப. 13

மனச்சித்தம் என்பது காப்பதற்கும் அடக்கி நிலை நிறுத்துவதற்கும் கடினமானது. அறிவாளியோ, வேடன் தன் அம்பை நிமிர்த்தி நேராக்குவதுபோல், சபல சித்தமும் நடுக்கமும் நிறைந்த தன் சிந்தனையை நிமிர்த்தி நேராக்குகிறான். த. ப. 33

தண்ணீரின் இருப்பிடத்திலிருந்து காய்ந்த தரை மீது எடுத்தெறியப்பட்ட மீன் துடிதுடித்துப் போகின்றது. அதுபோல, (இச்சையைக் கிளறிவிடும்) மாரனின் ஆதிக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நம்முடைய சிந்தனை யெல்லாம் துடி துடிக்கின்றது.

த. ப. 34

சிரிப்பு

பல்லைக் காட்டும் சிரிப்பு சிறுபிள்ளைத்தனமானது.

அ. நி. i – 261

உங்கள் மகிழ்ச்சியைக் காட்டிக்கொள்ள ஏதாவது காரணமிருந்தால் புன்னகை செய்வதே போதும்!

அங்குத்தா நிகாயம்

சீடன்

பாதையில் கொட்டிய குப்பைக் குவியலின் மத்தியிலே இனிமை மயமான வாசனையுடன் தாமரைப்பூ வளர்ந்தோங்கி மகிழ்விக்கிறது. அதைப் போலவே, குப்பைக் குவியலாக இருளில் நடமாடும் ஜனக் கும்பலின் மத்தியிலே, மெய்யறிவுச் சுடரான புத்தரின் சீடன் தனது அறிவினால் ஒளி வீசித் திகழ்கிறான்.

த. ப. 58, 59

பிறரைக் கஷ்டப்படுத்தி தான் சுகமடைய விரும்புகிறவன் துவேஷ விலங்குகளில் சிக்குண்டு அவற்றிலிருந்து விடுதலை பெற முடியாதவனாகிவிடுகிறான்.

த. ப. 29

சுகம்

சுகமாய் வாழ விரும்பும் ஜீவன்களை எவனுவது தன் சுகத்தை நாடித் தண்டித்து வதைப்பானேயாகில் சாவிற்குப் பிறகு அவன் நலம் பெறுவதில்லை.

த. ப. - 31

சுத்தம்

எவனும் பிறரைத் தூய்மையாக்குவதில்லை! சுத்த மும் அசுத்தமும் அவனவன் செயலே!

த. ப. - 165

சுமை

தன் துன்பங்கள் முடிவுறும் என்பதை இப்பிறவி யிலே உணர்ந்து தன் சுமைகளை எறிந்து விட்டவனும், தளையிடப் பெருதவனும் எவனே, அவனே பிராம ணன் என்பேன்.

த. ப.—402

சுயநலம்

சுயநலத்தினுல்தான் ஜனங்கள் துக்கப்படுகிருர்கள்.

ஸ. நி.

சுயப்பற்றுதல்

இலையுதிர்காலத்திய தாமரைப் பூவைப் பறிப்பது போல, உன்னுடைய சுயநலப் பற்றுதலை உன் கையாலேயே அறுத்தெறிந்துவிடு. புத்தர் காட்டிய நிர்வாணத்திற்குரிய சாந்தி வழியைப்போற்றி நடப் பாயாக.

த. ப: 285

### சூதாட்டம்

சூதாட்டத்தில், ஒருவன் வென்றால் ஓர் எதிரியைப் பெறுகிறான்; தோற்றாலோ இழந்ததை நினைத்துப் புலம்புகிறான். தீ. நி. iii

திருமணத்தில் கொள்வினை கொடுப்பினை செய்பவர்கள் சூதாடியை விரும்புவதில்லை; ஏனெனில், 'மனைவி ஒருத்தியைக் காப்பாற்ற சூதாடி பொருத்த மற்றவன் !' என்கிறார்கள். தீ. நி.

### செயல்

தீமை தரும் தீச்செயல்கள் புரிவது மிகவும் சுலபம்; நன்மைதரும் நற்செயல்கள் புரிவதுதான் மிகவும் கஷ்டம். த. ப.—163

ஆசை, துவேஷம், பிரமை, அச்சம்—இந்நான்கின் மூலமாகத் தவறான வழியில் சென்று மனிதன் தீச்செயல்கள் புரிகிறான். தீ. நி.

முட்டாள், தன் தவறை அறியாமலே தீய காரியங்களைச் செய்கிறான். சொந்தச் செயல்களாலே, நெருப்பைப் போல, வெந்தொழிகிறான்.

த. ப. 136

தீய காரியத்தைச் செய்யாமல் விடுவதே நல்லது; ஏனெனில், அதற்காகப் பின்னால் ஒருவன் வருந்த நேரிடும்! நல்ல காரியத்தைச் செய்வதே நல்லது; ஏனெனில் அதற்காகப் பின்னால் அவன் வருந்துவதில்லை. த. ப. 314

தீச்செயல் புரிபவன் இந்த உலகில் புலம்புகிறான்; மறுமையிலும் புலம்புகிறான். இம்மை மறுமை எனும் இரண்டிலுமே அவனுக்குத் துயரமே. அவன் தன் சொந்தச் செயலின் தீயவிளைவைக் காணும் போது புலம்பித் துன்புறுகிறான். த. ப. 15

நற்காரியம் செய்வதில் தாமதித்தால், மனமானது தீய வழியில் திளைக்கத் தொடங்கிவிடும். த. ப. 116

ஒரே புஷ்பக் குவியலிலிருந்து பலவிதமான மாலைகளையும் தொடுத்துவிட முடியும். அதைப்போலவே, அநித்தியமான மனிதன் தன்னுடைய ஒரே பிறவியிலேயே எத்தனையோ விதமான நற்காரியங்களை யெல்லாம் சாதித்துவிட முடியும். த. ப. 53

### செல்வத்தை விழுங்குபவை

அசமந்தத்தை எழுப்பும் கள் அருந்துவது; அகால வேளைகளில் தெருக்களில் அலைவது; அடிக்கடி திருவிழாப் பண்டிகைகளில் ஈடுபடுவது; சோம்பலை எழுப்பும் சூதாட்டம் பழகுவது; தீயவர்களோடு தோழமை கொள்வது; சோம்பேறித்தனத்தில் மூழ்குவது—இவை ஆறும் செல்வத்தை விழுங்கும் ஆறு வாசல்கள். தீ. நி.

### சொந்தமானது

எங்களுடையது என்று சொல்லிக்கொள்ள எதுவுமில்லாத நாம் ஆனந்தமாக வாழ்கிறோம்!

த. ப. 200

'என் குழந்தைகள்; என் 'பணம்' என்ற எண்ணத்தினால் முட்டாள் துக்கப்படுகிறான். அவனே அவனுக்குச் சொந்தமில்லை! குழந்தைகளும் பணமும் அவனுக்கு எப்படிச் சொந்தமாகும்? த. ப. 62

சோம்பேறி

சோம்பேறி—'இப்போது அதிகக் குளிர்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான்! 'இப்போது அதிக உஷ்ணம்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான். இப்போது அதிகாலை!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான். 'இப்போது அகாலம்!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான். 'இப்போது எனக்கு அதிகப்பசி!' என்பான்; ஒரு வேலையும் செய்யமாட்டான்! இப்போது என் வயிறு நிறைந்துவிட்டது!' என்பான். ஒரு வேலையும் செய்யமாட்டான். இவ்வாறு வாழ்நாளெல்லாம் சோம்பேறி வேலைசெய்யாமலிருக்கச் சாக்குப்போக்கு தேடிக்கொண்டேயிருப்பான்!

தீ. நி. iii

எவன் விழித்தெழவேண்டிய நேரத்தில் விழித்துக் கொள்ளாமல் இருக்கிறானோ, எவன் இளமையும் பலமும் வாய்ந்தவனாக இருந்தும், சோம்பிக் கிடக்கிறானோ, எவனுடைய கருத்தும் சிந்தனையும் பலஹீனமாக இருக்கிறதோ, அந்த மந்த புத்திக்காரனை சோம்பேறி ஒருபோதும் அறிவு மார்க்கத்தைக் கண்டறிய முடியாது. த. ப : 280

ஞானி

மற்றவர்களின் குறைபாடுகளையும் தவறுகளையும் பாவங்களையும் கவனித்துப் பார்க்கவேண்டியதில்லை; ஞானியானவன் தன்னுடைய சொந்தத் தவறுகளையும் கெட்ட செயல்களையும் கவனித்துப் பார்க்க வேண்டும்! த. ப. 50

ஆசைகளின் பிரகாரம் அனுபவித்துத் திரிவது அறபம் என்பதையும் அதன் பின் விளைவு துயரம் என்பதையும் அறிந்தவனே ஞானி. த. ப. - 186

ஞானமில்லாதவனுக்குத் தியானமில்லை; தியானமில்லாதவனுக்கு ஞானமில்லை. த. ப. 372

புஷ்பத்தில் தேன் சேகரிக்கும் வண்டு புஷ்பத்திற்குச் சேதமில்லாமலும், அதன் வர்ணத்திற்கோ வாசனைக்கோ பங்கமில்லாமலும், தேனை மட்டும் பெற்றுச் செல்கிறது. அதுபோல, ஞானி ஒருவன் தன் கிராமத்தில் வாழ்வானாக! த. ப. 49

[எந்த ஜாதியானும் ஞானியாக முடியும் என்பது புத்தரின் கருத்து.]

தங்களையே அழித்துக் கொள்பவர்

ஜீவ வதை செய்பவன், புளுகுபவன், பிறர் பொருளைக் கவருபவன், பிறன் மனைவியை இச்சிப்பவன், போதை யேற்றும் மதுபானங்களை அருந்துபவன்—இவர்கள் இந்த உலகில் தங்

களுடைய மூல வேர்களைத் தாங்களே கெல்லி யெறி கிறார்கள். த. ப. 246-247

தச ஸம்யோஜனங்கள்

தளைகள் ஐந்து :

[உடம்பு உண்மையானதென்ற எண்ணம்; சந்தேகம்; பயன் கருதிச் செய்யும் விரதங்கள்; புலனிச்சை களான காமம், கோபம்.]

நீக்க வேண்டியவை ஐந்து :

[உருவம் பெற வேண்டுமென்ற ஆசை; உருவம் பெருமல் வேறு உலகங்களில் வாழவேண்டுமென்ற இச்சை; கர்வம்; தற்புகழ்ச்சி; அறியாமை]

[இவைகளைப் போக்குவது தான் விசுத்தி மார்க்கம்]

தபஸ்

[பட்டினி விரதம் கிடந்து உடலையொடுக்கிக் காயக் கிலேசம் செய்யும் தபஸாலே எந்தவிதப் பிரயோஜன மும் இல்லை' என்பது புத்தரின் கருத்து]

தயாராகுதல்

அந்தோ! இப்போது நீ வெளுத்து உலர்ந்த சருகாகிவிட்டாய்! மரண தூதர்கள் உன்னருகில் வந்திருக்கிறார்கள். மரணத்தின் தலை வாசலுக்கே நீ வந்து நிற்கிறாய். ஆனால் வழிப் பிரயாணத்திற்கு

வேண்டிய உணவு எதுவும் இன்னும் நீ தயாரித்துக் கொள்ளவில்லை.
த. ப. 235

தற்காத்தல்

உள்ளும் புறமும் தற்காப்புகளுடன் நன்கு காவல் புரியப்படும் எல்லைப்புறக் கோட்டையைப் போல, ஒருவன் தன்னைக் காத்துக் கொள்வானாக.
த. ப. 315

தற்செருக்கு

நிலையாமையைப் பற்றிச் சிந்தி; தற்செருக்கு அழிந்து போகும்.
ம. நி. 1

தன் முயற்சி

உனக்கு நீயேதான் முயற்சி செய்யவேண்டும். ததாகர் வெறும் உபதேசிகளே. இந்த மார்க்கத்தில் பிரவேசிக்கும் அறிஞர், மாரனின் அடிமைத் தளைகளி லிருந்து விடுதலை செய்யப் பெறுகிறார்கள்.
த. ப. 276

தானம்

['ஒருவன் எண்ணிறந்த யாகங்களைச் செய்தாலும் தானங்களைச் செய்தாலும், ஒருகண நேரமாவது தன் மனதை அறநெறியில் செலுத்தியவனுக்கு அவன் ஈடாகமாட்டான்' என்பது புத்தரின் கருத்து.]

### தானமும் யோகமும்

வேதத் தியானம் செய்வதினாலும், புரோகிதர்களுக்குத் தானம் செய்வதினாலும், தேவர்களைக் குறித்து யஞ்ஞம் செய்வதினாலும், பஞ்சாக்கினியிலும் குளிரிலும் நின்று கொண்டு ஹடயோக முறைகளை அனுஷ்டிப்பதினாலும் ஒருவனின் மனசு சுத்தமாகி விடாது. மோகம் விலகி விடாது. [அவற்றினால் பயனில்லை.]
ஆமகந்த சூத்ரம்

### தியானம்

தியானத்தின் மூலம் ஞானம் கிடைக்கிறது; தியானத்தின் குறைவால் ஞானம் குன்றிவிடுகிறது.
த. ப. 282

### திருப்தி

திருப்திதான் பெருஞ் செல்வம்! த. ப. –204

### தீமை

தீமை புரிபவன் இந்த உலகில் துன்புறுகிறான்; மறுமையிலும் துன்புறுகிறான்; இரண்டிலும் அவனுக்குத் துன்பமே. தான் செய்த தீமையைப் பற்றி நினைக்கும்போது அவன் துன்புறுகிறான்; தீயபாதையில் செல்லும்போது இன்னும் அதிகமாய்த் துன்புறுகிறான்.
த. ப. 17

காஷாய ஆடைகளால் தோள்களை மூடிக்கொண்டிருப்பவர்களிலும்கூட பலர், தன்னடக்கமின்றி

சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள். அத்தகைய தீமை புரிபவர்கள் தங்கள் தீச்செயல்களாலேயே நரகத்தை அடைகிறார்கள். த. ப. 307

குற்றமற்ற வெகுளிகளைத் தண்டித்துத் தீங்கு செய்கிறவன், இந்தப் பத்துவித நிலைகளான துயரங்களில் ஒன்றை விரைவில் அனுபவிப்பான்: கூர்மையான வேதனை, வியாதி, உடற் குலைவு, பெரும் விபத்து, சித்தப் பிரமை, அரசியலான் தண்டனை, பயங்கரமான குற்றச்சாட்டு. உறவினர்களை இழத்தல், செல்வமனைத்தின் இழப்பு, நெருப்பாலோ இடியாலோ அவன் வீடு எரிந்து போதல்—மரணத்தின் போதும் அந்த வறட்டு மூடன் துக்கத்தில்தான் மறுஜனனம் காண்கிறான். த. ப. 137-40

தீயவழி

கருத்துடைமையில் களிப்புறு; உன் எண்ணங்களைக் கட்டிக் காத்துக்கொள்; சோர்வுறாதே; சேற்றில் விழுந்த யானையைத் தூக்கிவிடுவதுபோல், உன்னைத் தீயவழியிலிருந்து மீட்டுக்கொள். த. ப. 327

தீர்த்தமாடுதல்

வெளிப்புறத்தைக் கழுவியது போதும்! உட்புறத்தைக் கழுவுவதே எனக்குத் தேவை!

ஸ. நி. 389

துக்கம் (தத்துவம்)

உலகம் துக்கமயமானது. 'அவித்தை (அறியாமை) யிலிருந்து ஸம்ஸ்காரங்கள் (செய்கைகள்) உண்டாகின்றன; செய்கைகளிலிருந்து விஞ்ஞானம் (உணர்வு) உண்டாகின்றது; உணர்விலிருந்து நாமரூபங்கள் (அருவுரு) உண்டாகின்றன; அருவுருவுகளிலிருந்து ஷடாயதனங்கள் (வாயில்கள்) உண்டாகின்றன; வாயில்களிலிருந்து ஸ்பரிசம் (ஊறு) உண்டாகின்றது; ஸ்பரிசத்திலிருந்து வேதனை (நுகர்வு) உண்டாகின்றது; நுகர்விலிருந்து திருஷ்ணை (வேட்கை) உண்டாகின்றது; வேட்கையிலிருந்து உபாதானமும் (பற்றும்), பற்றிலிருந்து பவமும் (பிறப்புக்கு மூலமான கர்மத் தொகுதியும்) கர்மத் தொகுதியிலிருந்து பிறப்பும்; பிறப்பிலிருந்து மூப்பு மரணம் வலி முதலான உபாதைகளும் உண்டாகின்றன.]

துக்க காரணம்

[சகல துக்கங்களுக்கும் காரணம் ஆசை அல்லது வேட்கைதான்.]

துக்க நிவாரணம்

[ஆசையை அழித்துவிடுவதே நிவாரணம் என்பது.]

துக்க நிவாரண மார்க்கம்

[பரிசுத்தமான எட்டு அங்கங்களை உடைய அஷ்டாங்க மார்க்கம்.]

துயரம்

நம்பிக்கை, ஒழுக்கம், வீரியம், சித்தம், நடுவுடைமை, தர்மத்தை ஆராய்ந்து தெளிதல், அறிவு நற்பயிற்சிகள், சிந்தனை ஒருமிப்பு — இவற்றில் பரி பூரண நிறைவு பெறுவதின் மூலம் நீங்கள் (இந்த உலகின்) கணக்கற்ற துயரங்களை அடித்தொதுக்கி விடலாம். த. ப. 144

துவேஷம்

துவேஷத்திற்குச் சமமான வியாதி வேறெதுவுமில்லை. த. ப. 202

'என்னைத் திட்டினன்; என்னை அடித்தான் என்னைத் தோல்வியுறச் செய்தான்; என்னிடம் திருடினன்' — இது மாதிரியான எண்ணங்களை இறக்குமதி செய்பவரிடையே துவேஷம் என்பது ஒருபோதும் நீங்காது. த. ப. 3

'இங்கே நாமெல்லாம் கடைசியில் ஓர் இறுதி நிலைக்கு வந்தே தீரவேண்டும்' என்பதை உலகம் அறிவதில்லை. ஆனல் இதை அறிந்தவர்களுக்கோ அவர்களின் சண்டை சச்சரவுகளெல்லாம் உடனே தீர்ந்துவிடுகின்றன. த. ப. 6

### துறவறம்

தர்ப்பைப் புல்லைத் தவருகப் பற்றியிழுத்தால் அது கையைக் கிழித்து விடுகிறது; அதுபோலவே, தீயவழியில் அனுஷ்டிக்கும் துறவறமும் ஒருவனை நரகத்திற்கு வழி நடத்துகிறது. த. ப. 311

### துறவி

இவ்வுலகில் இருபுறமும் உள்ளதைச் சீர்தூக்கிப் பார்ப்பவனே துறவியாவான். த. ப. 269

மூடனுன துறவி, போலியான கீர்த்தியை விரும்புகிறுன்; துறவிகளிடையே முதன்மையானவனுகவும், துறவற மடங்களிலே தலைவனுகவும் இருக்கவேண்டுமென்றும், இல்லறத்தார் தன்னை வணங்கவேண்டுமென்றும் விரும்புகிறுன். த. ப. 73

எவன் மன மாசுகளிலிருந்து தன்னையே சுத்தி செய்து கொள்கிறுனே, எவன் சகலவிதமான நற்பண்புகளிலும் நன்கு நிலைத்து நிற்கிறுனே, எவன் சத்தியத்தையும் நிதானத்தையும் பொருட்படுத்துகிறுனே, அவனே காஷாய ஆடைக்கு அருகதை உள்ளவன். த. ப. 10

எவன் தன்னையே மனமாசுகளிலிருந்து சுத்தப் படுத்திக் கொள்ளாமலும், சத்தியத்தையும் நிதானத்தையும் பொருட் படுத்தாமலும் காஷாய ஆடை தரிக்க விரும்புகிறுனே அவன் அந்த காஷாய ஆடைக்குத் தகுதியானவன் அல்ல!

த. ப. 9

### துன்பம்

பாச பந்தங்கள் அனைத்தையும் அறுத்தெறிந்து விடுதலை பெற்றவனுக்கு மனதின் எல்லாவித விலங்குகளையும் உடைத்தெறிந்தவனுக்குத் துன்பம் என்பதே இல்லை!
த. ப. 90

'உண்டாக்கப்பட்டவை அனைத்தும் துன்பமும் துயரமுமானவை' இதை உணர்ந்து காண்பவனே துன்பத்தில் அமைவாக இருக்கிறான் இதுவே தூய்மைக்கு வழி நடத்தும் பாதை. (விசுத்தி மார்க்கம்.)
த. ப. 278

### துன்புறுத்தல்

'நீண்ட காலம் துன்பத்தைத் தாங்கும் சகிப்புத் தன்மையே முதன்மையான தவம்; நிர்வாணமே சிறந்த நிலை' எனப் புத்தர்கள் உரைக்கிறார்கள். பிறரைத் துயர்படுத்துகிறவன் சந்நியாசியல்ல; பிறருக்குத் தவறு செய்கிறவன் துறவியல்ல.
த. ப. 184

மனம், வாக்கு, காயம்—இம்மூன்றிலும் பிறருக்குத் துன்பம் செய்யாமல், இம்மூன்றையும் கட்டியாள்பவனையே பிராமணன் என்பேன். த. ப. 391

### தேவைகள்

தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழ்பவன் எவனோ அவனையே பிராமணன் என்பேன்.
த. ப. 404

### தொண்டு

எனக்குத் தொண்டு புரிகிறவன் நோயாளிகளுக்குத் தொண்டு புரியட்டும். (வினயபிடகம்)

### தோழமை

முட்டாளின் தோழமையை விட ஒருவன் தனியனாக வாழ்வது எவ்வளவோ மேலானது! த. ப. 330

அறிவுக் கூர்மையும், நேர்மையும், உறுதிப்பாங்கும் உள்ளவனாய், உன்னோடு ஒத்துப் பழகக் கூடியவனாய் ஓர் வழித் துணைவன் கிடைக்கிறானா? எல்லாக் கவலைகளையும் விட்டு விட்டு, களிப்புடனும் கருத்துடனும் அவனோடு நடந்து செல். த. ப. 328

### தோற்றம்

ஒருவன் எவ்வளவு அலங்காரமான ஆடை அணிந்திருந்தாலும், அவன் அமைதியும் தெளிந்த சித்தமுமுடைய வாழ்க்கை வாழ்வானாகில், பண் படுத்தப் பட்டவனையும் புலனடக்க முடையவனாகவும் வாழ்வானாகில், (பௌத்த தர்ம) மார்க்கத்தில் நேர்மையாக நடப்பவனையும், எல்லா உயிர்களிடத்திலும் (ஹிம்சை) உணர்ச்சி நீங்கியவனையும் இருப்பானேயாகில் அவனே அந்தணன், அவனே சமணன்; அவனே பிக்ஷு! த. ப. 142

### நக்ஷத்திர சகுன பலன்கள்

[நக்ஷத்திரங்களின், கதியாலும், கிரகங்களின்

மாறுதலாலும், சகுனங்களாலும் சுபாசுப பலன்களைச் சொல்வது உங்களுக்குத் தகாத காரியம்' என்பது புத்தரின் உபதேசச் சாரம்.]

நடத்தை

தீயநடத்தையுடன் கட்டுப்பாடில்லாமல் ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட நன்னடத்தையுடனும், சிந்தனைத் தெளிவுடனும் ஒருவன் ஒரே நாள் வாழ்வதே மேலானது. த. ப. 110

நடனம்

நடனம் என்பது கலப்பற்றதொரு பித்து அ. நி.

நண்பர்

நண்பர்களைத் தனக்குச் சமமான நிலையில் நடத்த வேண்டும். தீ. நீ. iii

நிலை மாறாத நண்பன்—தன்னுடைய இரகசியங்களை உன்னிடம் சொல்வான்; உன்னுடைய இரகசியங்களைக் காப்பாற்றுவான். தீ. நீ. iii

இந்த நான்கு நபர்களை உண்மையான இருதயம் படைத்த நண்பர்கள் என நீ கருதவேண்டும்; உனக்கு உதவும் சிநேகிதன் ; நல்ல காலத்திலும், கெட்ட காலத்திலும் நிலை மாறாதவன்; உனக்கு நன்மையானது எது என்பதை எடுத்துச் சொல்பவன்; உன் மீது வாஞ்சை கொள்பவன். தீ. நீ. iii

59356

நண்பர் என்ற போர்வையில் உள்ள இந்த நான்கு நபர்களைப் பகைவர் என நீ கருத வேண்டும்; முழுக்க முழுக்கக் கள்ளன், வெறும் வார்த்தைகளில் மட்டில் நல்லவனாக விளங்குபவன், நளினமாகப் பேசும் நாக்குடையவன், வீணான கூட்டாளி. தீ. நி.

நம்பிக்கை

[மகானால் உபதேசிக்கப்பட்டது என்பதற்காகவோ புராதன சாஸ்திரங்களில் எழுதப்பட்டது என்பதற்காகவோ, பழங்காலம் முதல் பலராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்பதற்காகவோ எதையும் நம்ப வேண்டியதில்லை. நாமே நேரில் பலவிதமாய் பரீட்சித்துச் சந்தேகங்கள் தீர்ந்த பிறகே, எந்தத் தர்ம மார்க்கத்தையும் நம்பிப் பின்பற்ற வேண்டும் என்பது புத்தரின் கருத்து.]

நல்லவன்

பொறாமையும், பேராசையும் கெட்ட நடத்தையுமுள்ளவன், பேச்சாலோ உடல் தேஜஸாலோ மட்டும் நல்லவனாகி விடமுடியாது. த. ப. 262

நற்செயல்

எந்தக் காரியத்தைச் செய்தால் பின்னால் மனம் மகிழ்வுறுமோ, எதன் பலனை மனோ உற்சாகத்தோடு அனுபவிக்க முடியுமோ, அதுவே நற்செயலாகும்!

த. ப. 68

தொலை தேசங்களுக்கு நீண்ட காலமாகப் பிரிந்து சென்றவன் பத்திரமாகத் திரும்பி வரும்போது உறவினரும் நண்பர்களும், அன்பர்களும் அவனைக் களிப் பேருவகையோடு வரவேற்கக் காத்திருப்பார்கள். அதுபோலவே, இவ்வுலகில் நற்காரியங்கள் செய்தவன் மறு உலகிற்குச் செல்லும்போது அவன் செய்த புண்ணியச் செயல்களெல்லாம், உறவினரைப் போல, அவனுக்காக அங்கே காத்திருக்கின்றன.

த. ப. 219-220

### நற்பாக்கியம்

தாயையும் தந்தையையும் ஆதரித்தல்; மனைவியையும் குழந்தையையும் போற்றுதல்; அமைதியானதொரு வாழ்க்கை நடத்துதல்—இதுதான் மாபெரும் நற்பாக்கியம். ஸூத்ர நிபாதம்.

### நன்றியுணர்வு

நன்றியுணர்வுதான் நெருங்கிய உறவு. த. ப. 204

### நன்னெறி

மனிதன் தன் நாக்கைக் காத்து, மனதில் நன்கு தன்னடக்கம் வரப்பெற்று தன் உடலால் எந்தவிதத் தவறும் செய்யாதிருப்பானாக! செயலுக்குரிய இந்த மூன்று பாதைகளையும் ஒருவன் பரிசுத்தமாகக் காப்பாற்றி வருவானேயாகில் அறிஞர் கற்பித்த நன்னெறியை அடைவான். த. ப. 281

நாக்கு

நாக்கு உள்ளவன் பிறரின் நாக்கையும் சகித்துக் கொள்ளவேண்டும். ஸ. நி.

நிகரற்றவை

மோகவெறி போன்ற நெருப்பு வேறெதுவுமில்லை; துவேஷத்தைப் போன்ற கவ்விப்பற்றும் முதலை வேறெதுவுமில்லை; சித்த மயக்கத்தைப் போன்ற வலை வேறெதுவுமில்லை; ஆசைகளைப் போன்ற ஆற்றுவெள்ளம் வேறெதுவுமில்லை. த. ப. 251

நிஷ்டை

மெய்யறிவு பெறுமல் சங்கை நிலவும் மனிதனை நரனை, ஆடையற்ற கோலமோ, சடைத்தலையோ, புழுதிமேனியோ உபவாசமோ, வெறுந்தரையில் கிடப்பதோ, நீறுபூசுதலோ முழங்காலிட்டு அசையாது நிஷ்டையிலிருப்பதோ எதுவும் புனிதப்படுத்தி விடாது.

த. ப. 141

நிந்தனை

நிந்தனைக்கு ஆளாகாதவன் இந்த உலகில் எவனுமே இல்லை. த. ப. 227

போர்முனையில் தன்னை நோக்கிப் பாய்ந்துவரும் அம்புகளை யானை தாங்கிக்கொள்வது போல, நான்

பிறரின் நிந்தனைச் சொற்களைத் தாங்கிக்கொள்வேன். ஏனெனில் அந்தத் தீமைதான் உலகத்தின் பண்பு!

த. ப. 320

**நிந்திப்பு**

ஜீவவதை செய்பவன்; திருடுபவன்; பொளுகுபவன்; பிறன் மனைவியை இச்சிப்பவன்—அவனை அறிஞர் நிந்திப்பார்.

தீ. நீ.

**நிர்வாணம்**

நிர்வாணம் என்றால் விடுதலை என்று அர்த்தம்.

ஸ. நி. iii—187

அறிவாளிகள் எப்போதும் வலுவான சக்திகள் படைத்தவராய், சிந்தனை ஒருமிப்புடனும், தளராத உறுதியுடனும், சீரான போக்குடனும், நிர்வாணத்தை அடைகின்றனர். அந்த நிர்வாணமே அதி உன்னதமான ஆனந்தம்.

த. ப; 23

**நிலையானது**

இந்தப் பூமியிலே நிலையானது எதுவுமில்லை; புத்தர்களுக்கோ நிலையற்றது எதுவுமில்லை.

த. ப. 255

**நோய்**

'என் உடல் நோய் பிடித்ததாயிருந்தாலும் என் மனம் நோய் பிடித்ததாக இருக்கக் கூடாது' என்று

நீங்களே உங்களைப் பயிற்சி செய்து கொள்ள வேண்டும். ஸ. நி. iii—1

பேராசையே பெரும் வியாதி; ஐம்புலன் இச்சைகளே பெரும் வியாதி—இதை உள்ளபடி உணர்ந்தவனுக்கு நிர்வாணமே பெரும் சுகம். த. ப. 203

பகைமை

எந்தக் காலத்திலும் பகைமை என்பது பகைமையினால் நீங்கி விடுவதில்லை. அன்பு ஒன்றினாலேயே பகைமை நீங்கும்—இதுதான் மிகப் பழைய நியதி.

த. ப.—5

அன்புடைமை பயிற்சியைப் பயில்வாயாக; அவ்வாறு பயில்வதினால் சகலவிதமான பகைமையும் கைவிடப்படும். ம. நி. i

பஞ்சபலன்கள்

[மனதின் அங்கங்களுக்குள்ள ஆற்றல்]

[சிரத்தை; சாமார்த்தியம்; ஞாபகம்; மனனம்; ஊகம்.]

படிப்பு

அறிவில்லாத ஒருவன் எவ்வளவுதான் சாஸ்திரங்கள் படித்துப் பெரும் பகுதியை மனப்பாடம் செய்து ஒப்பித்தாலும், அதன் பிரகாரம் நடக்கா

விடில், மதகுரு வாழ்வில் சமணனுக்குரிய எந்தப் பங்கும் அவனுக்கு இல்லை! மற்றவர்களின் மாடு களைக் கணக்கிட்டு எண்ணும் மாடுமேய்ப்பவன் போன்றவனே அவன்! த. ப. 19

படைப்பு

படைக்கப்பட்ட அனைத்தும் அழிவடையும் என் பதை நீ புரிந்துகொண்டால், படைக்கப் பெருதகை நீ அறிந்துகொள்வாய். த. ப. 383

பண்பு

நல்ல பண்புள்ள மனிதன் இந்த உலகில் ஆனந்த முறுகிறுன்; மறுமையிலும் ஆனந்த முறுகிறுன்; இம்மை மறுமை இரண்டிலும் அவனுக்கு ஆனந்த மே! அவன் தன் சொந்தச் செயலின் தூய விளை வைக் காணும்போது பேரானந்தமுற்று பெருங் களிப்படைகிறுன். த-ப i—16

தகரப்பூ அல்லது சந்தனத்தின் வாசனை அற்ப மானது. நல்ல பண்புள்ளவர்களின் வாசனையோ தெய்வங்களையும் எட்டுமளவு உயரத்துக்கு எழும்பு கிறது. த. ப. IV—56

பழக்கப்படுத்திய யானையைத்தான் போர் முனைக்கு நடத்திச் செல்வார்கள்; பழக்கப்படுத்திய யானையின் முதுகுமீதுதான் அரசர் ஏறுவார். அது போல, நல்லவழியில் பழகிப் பண்பட்டவனே மக்க

ளில் சிறந்தவன். அவனைத்தான் பழிச்சொற்கள் பாதிக்கா. த. ப. 321.

பயனற்றவை

சிரத்தையில்லாமல் செய்யும் காரியம்; ஒழுங்காகக் கடைப்பிடியாத விரதம்; தயக்கத்துடன் கைக் கொள்ளும் பிரும்மசரியம்— இவை எந்தப் பெரும் பயனையும் கொண்டுவராது. த. ப. 312

பரிபக்குவ நிலை

சோம்பலின் அறியாமையைக் கண்டு அஞ்சி, முயற்சியின் அறிவுப் பிரதிபலிப்பில் பேரானந்தம் காணும் பிக்ஷுவானவன் தன் பரிபக்குவ நிலையிலிருந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் தவறி விழ முடியாது—அவன் நிர்வாணநிலையின் அருகே இருப்பவனாவான். த. ப. 32

பலாத்காரம்

பலாத்காரத்தினால் தன் காரியத்தைச் சாதிப்பவன் நீதிமானல்ல; நன்மை தீமை இரண்டையும் எடைபோட்டுப் பார்த்துத் தீர்மானிப்பவனே அறிஞன். த, ப. 256

பழித்தல்

மௌனமாய் இருப்பவனையும் பழிக்கிறார்கள் ; அதிகம் பேசுபவனையும் பழிக்கிறார்கள்; குறை

வாய்ப் பேசுபவனையும் பழிக்கிறார்கள். இது இன்று தோன்றியதல்ல; பண்டைநாள் முதலாகவே இருந்து வரும் ஓர் மொழி. த. ப. 227

பாசம்

மனைவி மக்கள் மீது வைக்கும் பாசக் கயிறே மிகவும் பலமானது. த. ப. 245

பாடல்

அர்த்தமற்ற சொற்களால் ஆக்கப்பட்ட நூறு பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பதைவிட, அர்த்தமுள்ள அறநெறிப் பாடலின் ஒரே சொல்லே மேலானது. அதைக் கேட்பவன் உபசாந்தி (துன்பத்திலும் இன்பத்திலும் சலிக்காத மன அமைதி நிலை) அடைகிறான். த. ப. 8—102

பாபச்செயல்

மனிதன் தான் செய்த பாபச் செயலின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளக்கூடிய இடம் அகன்ற வானத்திலும் இல்லை; ஆழ்ந்த கடலிலும் இல்லை; உயர்ந்த மலைக் குகைகளிலும் இல்லை. த. ப. 127

பாபச் செயல் பழுத்துப் பலன் தராத வரையில் அதைத் தேன் என்று மூடன் நாடுகிறான். ஆனால் அது பழுத்து அதன் பலனை அனுபவிக்க நேருகையில் அவன் துன்பத்தை அடைகிறான். த. ப.—69

புதிதாய்க் கறந்த பசும்பால் போல, பாவச் செயலானது உடனேயே புளிப்பாக மாறிவிடுவதில்லை. நீறு பூத்த நெருப்பைப் போல் உள்ளூரக் கனன்று கொண்டேயிருந்து அது மூடனைப் பற்றுகிறது. த. ப. 71

பாபம்

மனிதன் ஒருமுறை பாபம் செய்துவிட்டால், திரும்பத் திரும்ப அதையே செய்யாதிருப்பானாக. த. ப. -117

கையில் புண்ணில்லாதவன் விஷத்தைத் தொட்டாலும் அது பாதிப்பதில்லை தீச்செயல் புரியாதவனைப் பாவம் பாதிப்பதில்லை. த. ப.-124

பாவம் பலனளிக்கத் தொடங்காத வரை தான் அது இன்பகரமாய்த் தோன்றும்; ஆனால் அது பலனளிக்க ஆரம்பிக்கும் போதுதான் பாவி தன் பாவத்தின் தன்மையை உணர்கிறான். த. ப.-119

பாபம் இல்லாததில் பாபத்தையும், பாபம் இருப்பதில் பாபமின்மையையும் காண்கிறவர்கள், தவறான கொள்கைகளைத் தழுவி தீய கதியில் செல்கிறார்கள். த. ப. 318

பிக்ஷு

ஓ பிக்ஷுவே! உன்னையே நீ தட்டியெழுப்பு; உன்னையே நீ போதித்துக்கொள்; இவ்வாறு உன்னை

நீயே தற்காத்துக்கொண்டு, மனதில் கவனமாயும் கருத்தாயும் இருப்போயேயாகில், நீ ஆனந்தத்துடன் வாழ்வாய்.
த. ப. 379

சோம்பலின் அறியாமையைக் கண்டு அஞ்சி, கருத்து முயற்சியில் பேரானந்தம் காணும் பிக்ஷுவானவன், ஒரு பெரும் தீயைப்போலக் கிளம்பி, சிறியதாகவோ பெரியதாகவோ உள்ள தன் தடை விலங்குகளை யெல்லாம் சுட்டெரித்துக் கொண்டு செல்கிறான்.
த. ப. ii–31

பிக்ஷுக்களுக்கு உரியவை எட்டு

பிக்ஷாபாத்திரம்; மூன்று வஸ்திரம்; இடையில் கட்டும் கச்சை; கந்தைகளைத் தைப்பதற்குரிய ஊசி; க்ஷவரக் கத்தி; நீர் வடிகட்டுகிற துணி.

பிரகாசம்

சூரியன், பகலில் பிரகாசமாய் இருக்கிறான்! சந்திரன், இரவில் பிரகாசமாயிருக்கிறான்! போர் வீரன், தன் யுத்தக் கவசங்களில் பிரகாசமாயிருக்கிறான்! அந்தணன், தன் தியானத்தில் பிரகாசமாயிருக்கிறான்! ஆனால் விழிப்புற்ற புத்தரோ இரவு பகல் எந்நேரமும் அற்புதமான பிரகாசத்துடனிருக்கிறார்.
த. ப. 387

பிராமணன்

தாயைக் கொண்டோ, குலமூலத்தைக் கொண்டோ, ஒருவனைப் பிராமணன் என்று கூறமாட்டேன்.

அவன் செல்வங்களுயிருந்தால் அகம்பாவியாவான்; ஆனல் எவன் எல்லாவித ஆசைகளிலிருந்தும் விடு பெற்ற ஏழையோ அவனையே பிராமணன் என்று கூறுவேன். த. ப.396

ஒருவன் பிராமணன் ஆவது, தன் சடைத் தலையால் அல்ல; தன் குலம் கோத்திரத்தினல் அல்ல; பிறப்பின லும் அல்ல; எவனிடம் உண்மையும், அறமும் நிலைத் திருக்கிறதோ, அவனே பாக்கியவான்; அவனே பிரா மணன் ! த. ப.393

எவனுடைய அறிவு ஆழ்ந்ததோ, எவன் ஞான மேதை உடையவனே, நல்லவழி தீயவழி எதுவென் பதை எவன் உணர்ந்தவனே, எவன் மெய்ப்பொருள் முடிவை அடைந்தவனே, அவனே பிராமணன் என் பேன். த. ப.—403

பகைமைத் தன்மையுடையவர் மத்தியில் பகைமை யற்றவனும், குற்றம் குறையே கண்டுபிடிப்பவரிடை யில் மிருதுவானவனுகவும், ஆசை பிடித்தவர்களிடை யே ஆசையற்றவனுகவும் எவன் இருக்கிருனே, அவனையே பிராமணன் என்பேன். த. ப. 406

எவன் சிந்தனையுள்ளவனே, எவன் குற்றமற்ற வனே, எவன் நிலையான அமைதியுள்ளவனே, எவன் கடமையுணர்வு நிறைந்தவனே, எவன் ஆசைகளற்றவனே, எவன் உத்தம ஞானியின்

முடிவான இலட்சியத்தை அடைந்தவனோ; அவனை யே நான் பிராமணன் என்பேன். த. ப. 386

இந்த உலகில் புண்ணியபாவங்களுக்கு அப்பாற் பட்டவன், அவற்றின் தளைகளுக்கு மேற்பட்டவன், சோக உணர்ச்சியிலிருந்தும் பாபத்திலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் விடுபட்டிருப்பவன் எவனோ, அவனே பிராமணன் என்பேன். த. ப. 412

இந்த உலகில் எல்லாவித ஆசைகளையும் விட்டு விட்டு வீடு இல்லாமல் சஞ்சரிப்பவன் எவனோ, எவனிடம் வாழ்வின் மோகமெல்லாம் வெளியேறி விட்டதோ, அவனே பிராமணன் என்பேன்.

த. ப. 41

ஊசி முனையிலிருந்து கடுகு உருண்டுவிழுவது போல, எவனிடமிருந்து, கோபமும் துவேஷமும் கர் வமும் பொறாமையும் நழுவி விழுந்து விடுகிறதோ, அவனே பிராமணன் என்பேன். த, ப. 407

இகத்திலும் பரத்திலும் எதிலும் ஆசையற்றவன், எந்த நாட்டங்களும் இல்லாதவன்; கட்டற்றவன் எவனோ, அவனே பிராமணன் என்பேன்.

த. ப. 410

பிழைகள்

தட்டான், வெள்ளியின் அசுத்தங்களை ஊதிப் போக்குகிறான். அதுபோல, அறிவுள்ள மேதையான வன் தன் மாசுகளை ஒவ்வொன்றாகத் தக்ஷணமே

ஊதித் தள்ளி எல்லாப் பிழைகளையுமே துடைத்துக் கொள்கிறான். த. ப. 239

### பிறப்பு

எங்கு பிறப்பு இருக்கிறதோ அங்கு அழிவும் மரணமும் இருக்கிறது. ஸ. நி. ii.

### பிறன் மனைவி

பிறன் மனைவியை இச்சிக்கும் நாசகாரன் நான்கு விதமான பலன்களையே பெறுகிறான். கெட்ட பெயர்; . சௌகரியமில்லாத படுக்கை; மூன்றாவதாகத் தண்டனை; கடைசியாக நரகம்! த. ப. 309

எவனும் பிறன் மனைவி மீது சித்தம் வைக்க வேண்டாம். ஏனெனில், அதனால் கெட்ட பெயரும் (நரகத்திற்குரிய) பாப வழியும் உண்டாகிறது; அஞ்சி நடுங்கும் ஒருத்தியின் கரங்களிலே ஒருவன் அஞ்சிக் கொண்டே அனுபவிக்கும் அற்ப நோச் சுகந்தான் அதில் இருக்கிறது; அரசியலாரும் அதற் ...க் கடுந் தண்டனை விதிக்கிறார்! த. ப. 310

### பின்பற்றுதல்

ஞானியாயும், பேரறிஞராயும், கல்விமானாகவும், பொறுமைசாலியாகவும் கடமையறிந்தவராயும், மேலானவராயுமுள்ள மகானையே எவனும் பின்பற்ற வேண்டும். த. ப. 208

புகழ்

முழுதும் நிந்திக்கப்பட்டவனும், முழுதும் புகழப்பட்டவனும், முன்பும் இருந்ததில்லை; இப்போது இருக்கவுமில்லை; இனி இருக்கப் போவதுமில்லை.

த. ப. 228

பூக்களின் வாசனையானது காற்றை எதிர்த்துச் செல்வதில்லை. சந்தனக் கட்டை, தகரப்பூ, மல்லிகை முதலியவற்றின் வாசனைகளும் காற்றின் எதிர்த் திசையில் செல்வதில்லை. ஆனால் நல்லவர்களின் புகழ் மணமோ சூறைக் காற்றையும் எதிர்த்துச் செல்கிறது. நல்ல மனிதன் எந்தத் திசையிலும் பரவி நிற்கிறான். த. ப. 54

கருத்து முயற்சியுள்ள ஒருவன், தன்னைத்தானே விழிப்புற்றெழச் செய்வானேயாகில், மறதி இல்லாதவனாய் இருப்பானேயாகில், அவனுடைய செயல்கள் நல்லனவாக இருக்குமேயாகில், ஆலோசனையுடன் செயல் புரிவானேயாகில், தன்னைத் தானே அடக்கிக் கொண்டு நிதானத்துடன் இருப்பானேயாகில், அறநெறியுடன் வாழ்வானேயாகில்—அவனுடைய புகழ் செழித்தோங்கி வளரும்.

த. ப. 24

புகழ்ச்சி

ஸ்திரமான பாறையானது புயற் காற்றுக்கும் அசைந்து கொடுப்பதில்லை. அதுபோல், அறிவாளி

கள் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசைந்து கொடுப்பதில்லை!
த. ப. 81

புத்தர்கள்

புத்தர்கள் பழங் காலத்திலும் இருந்து வந்திருக்கிறார்கள்; எதிர்காலத்திலும் இருந்து வருவார்கள்
தி. நீ. II-143

புல்லறிவாளர்

புல்லறிவாளர்களான மூடர்கள் தங்களுக்குத் தாங்களே விரோதிகள்!
த. ப. -66

பெண்ணாசை

பெண்களிடம் மனிதன் மோகமும் காம இச்சையானது எவ்வளவு தூரம் அழிக்கப்படாமல் அற்பமாகவேனும் இருந்து வருகிறதோ, அதுவரை, பால் குடிக்கும் பசுங் கன்று தன் தாயோடு ஒட்டிக் கொண்டிருப்பது போல, அவனது மனமானது வாழ்வைப் பற்றிக் கொண்டு கட்டுத் தறியிலே இருந்து வரும்.
த. ப. 284

பெரியவரை மதித்தல்

அறிவு முதிர்ந்த பெரியவர்களை இடையறாமல் வணங்கி எப்போதும் மதித்துப் போற்றி வருபவனுக்கு ஆயுள், அழகு, ஆனந்தம், சக்தி என்ற நான்கு நற்பயன்களும் அதிகரித்து வரும்.
த. ப. 8-190

### பெற்ருேர்

தாய் தந்தையர் தங்கள் மகனைத் தீய வழியி லிருந்து காக்க வேண்டும்; நல்ல வழியில் செலுத்த வேண்டும்; வித்தை கற்பிக்க வேண்டும்; பொருத்த மான மனைவியைத் தரவேண்டும்; காலம் வரும் போது தங்கள் செல்வத்தை அவன் கையில் கொடுக்க வேண்டும். தீ. நி. iii-185

### பேச்சு

அறிவாளி பணிவாகப் பேசுதல் வேண்டும்.
அ. நி. i-199

அர்த்தமற்ற சொற்களால் ஆக்கப்பட்ட ஆயிரம் பேச்சைவிட, அர்த்தமுள்ள ஒரே சொல் மேலானது. அதை ஒருவன் கேட்பானேயாகில் அமைதியாகி விடுகிருன். த. ப. 100

சொல்லியவாறே செய்கையில் நடக்கும் ஒருவனின் ரம்மியமான பயனுள்ள பேச்சு, வர்ண நிறைவுள்ள அதிக அழகானதொரு புஷ்பம் வாசனையும் பெற் றிருப்பது போன்றது. த. ப. 52

வர்ண ஜொலிப்பு நிறைந்த அதி அழகான ஒரு பூ நறுமணம் பெற்றிராவிட்டால் எப்படியோ, அது போன்றது செயலில் காட்டாமல் வெறும் வாயளவில் மட்டும் மிக ரம்மியமாகப் பேசும் ஒருவனின் பயனற்ற சொற்கள். த. ப. 51

உண்மையான பேச்சையே உரைப்பவன், முரட்டுத் தனமில்லாமல் அறிவுத் தெளிவுடன் இனிமையாகப் பேசுபவன், எவர்மனமும் புண்படாமல் பேசுபவன் எவனோ, அவனே பிராமணன் என்பேன்.

த. ப. 408

### பேராசை

பொன் நாணயங்களை அடை மழையாகப் பெய்தாலும், ஆசைகள் அடங்காமல் பெருகும்.

த. ப. -186

### பேரானந்தம்

கருத்து முயற்சியில் முன்னேறியவர்கள், அதைத் தெளிவாக உணர்ந்துகொண்டு, அந்தக் கருத்து முயற்சியிலேயே பேரானந்தம் கொள்கிறார்கள். ஆன்றோர்கள் காட்டிய அறிவு நெறியில் பெருமகிழ்ச்சி யடைகிறார்கள்.

த. ப. -22.

### பொக்கிஷம்

திருடர்கள் திருட முடியாத பொக்கிஷம் ஒன்று உண்டு. அறிவாளி நற்காரியங்களைச்செய்வானாக—அது தான் ஒருவனைப் பின்பற்றி வரும் பொக்கிஷம்!

அழகிய முகம், இனிய குரல், சௌந்தரியம் நளினம், தேஜஸ், பெருமை, சந்தர்ப்பம்— இவற்றை

யெல்லாம் இந்தப் பொக்கிஷத்தினல் பெற்றுவிட முடியும்!

கு. பி.

பொய்

இல்லாததைச் சொல்பவன் நரகத்திற்குப் போகிருன்; ஒன்றைச் செய்துவிட்டு, 'அதை நான் செய்ய வில்லை' என்று பொய்யுரைப்பவனும் அவ்வாறே நரகத்திற்குச் செல்கிருன் த. ப. 306

பொய்மை

'ஆக்கப்பட்ட உருவங்கள் அனைத்தும் ஆத்மா வற்ற பொய்மையே'—இதைக் கண்டறிபவனே துக்கத்திலும் அமைவாக இருக்கிருன். இதுவே தூய்மைக்கு வழி நடத்தும் பாதை (விசுத்தி மார்க்கம்) த. ப. 279

பொருமை

பொருமை யுணர்ச்சியை வேரோடு கெல்லி யெறிந் தவனே இரவிலும் பகலிலும் அமைதியாயிருக்கிருன். த. ப. 250

போகம்

போகத்திலிருந்து சோகம் பிறக்கிறது. த. ப. 214

மதகுரு

சாஸ்திரங்களில் சிலவற்றையே பாடம் செய்தவனு யிருந்தாலும், அவற்றைப் பின்பற்றி நடப்பவனும்,

ஆசைவெறி, துவேஷம், அறிவீனம் முதலானவற்றைத் துறந்தவனுயும், மெய்யான அறிவு, மனத் தூய்மை முதலானவற்றை உடையவனுயும், இந்த உலக வாழ்விலோ, இனிவரப்போகும் வாழ்விலோ, எவ்விதக் கவலையுமற்றவனுயும் எவன் விளங்குகிருனே, அவனே மதகுரு வாழ்வில் சமணனுக்குரிய பங்கை நிச்சயம் அடைவான். த. ப. 1—20

### மதுபோதை

மது போதையில் மூழ்குவதினுல் இந்த ஆறுவிதக் கேடுகள் விளைகின்றன: செல்வம் இழத்தல்; சச்சரவு அதிகரித்தல்; நோய்க்கு இடமாதல்; நல்ல பெயர் அழிதல்; பண்பற்ற செயல்கள்; மூளையின் சக்தி குன்றுதல். தீ. நி.

புளித்த நுரைதள்ளும் கள்ளையும், காய்ச்சி வடித்த சாராயத்தையும், அசமந்தத்தை எழுப்பும் லாகிரி வஸ்துகளையும் தவிர்க்க. கு. ப.

### மந்திரங்கள்

[தன் ஞானத்தையும் சக்தியையும் ஆசாரத்தையும் பற்றி மற்றவனிடம் பேசிக்கொள்கிறவனும், மந்திரங்களாலும் தந்திரங்களாலும் அற்புத சக்திகளை அடைய விரும்புகிறவனும், அவைகளால் பிறரை வசப்படுத்த முயல்கிறவனும், பௌத்த

சங்கத்திலிருந்து விலக்கப்படவேண்டும் என்பது புத்தரின் கருத்து.]

மரணம்

மனிதனின் மனம் கலங்கிக் கிடந்தால், அவன் இன்ப மலர்கள் பறித்துக்கொண்டிருக்கும்போதே, அவன் தன் கேளிக்கைகளில் பூரண திருப்தியடையும் முன்பே, மரணம் அவனை வென்றுவிடுகிறது.
த. ப. 48

இந்த உடல் ஓர் நீர்க்குமிழி என்பதை உணர்ந்தவன் எவனோ, அது கானல் நீர்போல் சாரமற்றது என்பதைக் கற்றறிந்தவன் எவனோ, அவன் மாரனின் கூரான மலர் அம்புகளை உடைத்தெறிந்து விடுவான்; மரண ராஜனைப் பார்க்கவும் மாட்டான்.

த. ப. 46

பிறப்புக்குக் காரணம் எதுவோ அதுவே இறப்பிற்கும் காரணமாகும்.
தீ. நீ.ii. 154

கருத்து முயற்சியே அழியாத நிலையான நிர்வாணத்திற்குரிய பாதை. அறியாமையின் சோம்பலே மரணத்திற்குரிய பாதை. கருத்துள்ளவர்கள் சாவதில்லை. அறிவற்ற சோம்பேறிகளே உயிரோடிருந்தும் செத்தவர்களாகிறார்கள்.
த. ப. 21

இந்த உலகை ஒரு நீர்க்குமிழியாகவும் கானல் நீராகவும் காண்பவனை மரணதேவன் ஏறிட்டுப் பார்க்க முடியாது.
த. ப. 170

சாவால் கைப்பற்றப்பட்ட ஒருவனை பிள்ளைகளோ தந்தையோ உறவினரோ காப்பாற்ற முடியாது; இனத்தவரிடமிருந்தும் உதவி இராது. த. ப:288

உறங்கும் கிராமத்தை வெள்ளப்பெருக்குத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறது. அதுபோல, தன் மக்கள் மந்தைகள் என்று பெருமையுற்று மனம் அலை பாய்ந்து கிடக்கும் மனிதனைச் சாவானது வந்து தூக்கிக் கொண்டு போய்விடுகிறது. த. ப:287

மறுபிறவி

மலம் தின்று வளரும் பெரிய பன்றியைப்போல், ஒருவன் உடல் கொழுக்கப் பெருந் தீனி தின்பவனாகவும், தூங்கி வழிபவனாகவும் சோம்பேறித் தனமாய் அங்கு மிங்கும் அசைபவனாகவும் இருந்தால், அந்த முட்டாள் திரும்பத்திரும்ப மறு பிறவி யெடுக்க நேரிடும். த. ப. 325

மனம்

மனம்—வெகுதூரம் வரை அலையக்கூடியது; தன்னந்தனியே சஞ்சரிப்பது; உருவமற்றது; இருதயக் குகைக்குள் ஒளிந்து கொண்டிருப்பது. அத்தகைய மனதை அடக்கியாள்பவர்கள் மாரனின் தளைகளிலிருந்து விடுதலை பெறுவார்கள். த. ப. 37

அடக்கி நிலை நிறுத்துவதற்குக் கடினமாயும், பறந்தோடும் தன்மை வாய்ந்ததாயும், இஷ்டப்படி யெல்லாம் பாய்ந்து திரிவதாயுமுள்ள மனதை அடக்கியாளப் பழகுவது நல்லது. அடக்கியாண்டு பண்படுத்தப்பட்ட மனம் பேரானந்தத்தைக் கொண்டு வருகிறது.
த. ப. 35

ஒரு விரோதி இன்னொரு விரோதிக்குச் செய்யும் தீமையைவிட; நிந்திப்பவன் தன் எதிரிக்குச் செய்யும் தீமையை விட தவறான வழியில் செலுத்தப்பட்ட நம் மனமே நமக்கு மாபெரும் தீமை செய்யும்.
த. ப.42

உறங்கும் கிராமத்தைப் பெரு வெள்ளம் தூக்கிக் கொண்டு போய்விடுகிறது. அதுபோல, எவனுடைய மனம் தடம்புறண்டு கிடக்கிறதோ, அவன் இனிய மலர்கள் சேகரித்துக்கொண்டிருக்கும் போதே அவனை மரணம் தூக்கிக்கொண்டு போய்விடுகிறது.
த. ப.47

முன்பெல்லாம் என் மனம் இஷ்டம்போல் அலைந்து திரிந்துகொண்டிருந்தது. மூர்க்கயானையைப் பாகன் அங்குசத்தால் அடக்குவதுபோல் இப்போது என் அறிவால் என் மனதை அடக்கியாள்வேன்; என் வழிக்கு அதை வளைத்து வழிநடத்திச் செல்வேன்.
த. ப. 326

மனிதன்

மனிதன் ஓர் புஜகன்! ம.நி.I—41

நம்முடைய சிந்தனைகளின் விளைவே நாமெல்லாம். சிந்தனைகளின் அடிப்படையிலே ஸ்தாபிக்கப்பட்டுச் சிந்தனைகளாலேயே உருவாக்கப்படுகிறான் மனிதன்.

த.ப. 1

கோவேறு கழுதைகளும், சிந்துநாட்டு உயர்சாதிக் குதிரைகளும், பெரும் போர்யானைகளும் பழக்கப் படுத்திய பிறகு சிறந்தவைகளே. ஆனால், தன்னைத் தானே அடக்கியாளும் மனிதனே இவைகளனைத்தி லும் சிறந்தவன். த. ப. 322

மாணவன்

குருவானவர் மாணவனைத் தன் மகனைப்போலக் கருதவேண்டும்; மாணவன் குருவைத் தன் தந்தை யைப்போல் கருதவேண்டும்.

வி.பி. மகாவர்கம், iii—7.

மார்க்கம்

செல்வத்தை அடையும் மார்க்கம் வேறு; நிர்வா ணத்தை அடையும் மார்க்கம் வேறு.

த.ப. 75.

மார்க்கங்களில் அஷ்டாங்க மார்க்கமே சிறந்தது.

த.ப. 273.

இந்த மார்க்கத்தில் நீ செல்வாயானால் உன்னுடைய துக்கம் முடிவுற்றுவிடும்! உடல் சதையிலுள்ள துன்

பங்களாகிய முட்களை நீக்கும் வழியை உணர்ந்ததும் நான் இந்த மார்க்கத்தை உபதேசித்தேன்.

த.ப.275.

முன்னேற்றம்

சோம்பேறிகளான மூடர்களின் மத்தியில் கருத்து முயற்சி உள்ளவனும், உறங்குபவர்களின் மத்தியில் விழிப்புள்ளவனும், அறிவாளி விளங்குவான். பந்தயக்குதிரை மற்ற வாடகைக் குதிரைகளைப் பின்னால் விட்டுவிட்டு முன்னேறிப்பாய்ந்து ஓடுவது போல், அவன் மற்றவர்கள் மத்தியில் முன்னேறி விடுகிறான்.

த.ப. 29.

மூடன்

மூடனைப் பிறர் அழிக்க வேண்டியதில்லை; தன்னைத் தானே அழித்துக்கொள்ளுகிறான்!

த.ப.355.

முட்டாள்களைப் பாராமலிருப்பவன்தான் எப் போதும் ஆனந்தமாயிருக்கிறான்.

த.ப. 206

மெய்ப்பொருள்

மெய்யில் மெய்யையும், பொய்யில் பொய்யையும் அறியும் தன்மை படைத்தவர்கள், மெய்ப்பொருளி டம் வந்து சேர்கிறார்கள்; உண்மையான வேட்கை களையே பின்பற்றுகிறார்கள்.

த.ப.12

பொய்மையில் மெய்யைக் கற்பனை செய்து கொண்டு, மெய்யைக் காண்பவர் எவரும் மெய்ப் பொருளிடம் ஒரு போதும் வந்து சேர்வதில்லை. அவர்கள் வெறும் ஆசைகளைப் பின்பற்றியே வீணாகத் திரிகிறார்கள். த.ப.i-11

### மௌனவிரதம்

அறிவற்ற முட்டாளாயிருக்கும் ஒருவன் வெறும் மௌன விரதம் அனுஷ்டிப்பதினால் மட்டும் துறவி யாகி விட மாட்டான். த.ப. 26

### மௌனம்

மௌனத்தில் உன் மனதைச் சமநிலைப்படுத்து. ஸ.நி

மனதின் சம நிலையில் பிறப்பது; உற்சாகமும் நிம்மதியுமானதொரு நிலை—இதுதான் ஆரியமௌனம் என அழைக்கப்படுகிறது. ஸ.நி.ii-273

### யாகம்

ஒருவன் மாதாமாதம் ஆயிரம் யாகங்கள் வீதம் நூறு வருஷங்கள் வரை யாகம் செய்கிறான் என்றால், மெய்யறிவில் நிலையூன்றிய ஒரு ஞானியை அவன் ஒரு கணமே வணங்குகிறான் என்றால், அந்த ஒரு கண வணக்கமே நூறு வருஷ யாகத்தை விட மேலானது. த.ப.106.

### வக்கிரநோக்கம்

வக்கிரநோக்கம் என்னும் குற்றமுடையவனுக்கு இரண்டு பாதைகள்தான் திறந்திருக்கின்றன. ஒன்று பாப விமோசன ஸ்தானம்; மற்றது மிருகப் பிறப்பு.
ஸ. நி. IV-305

### வதந்தி

வதந்தி பேசுபவர்களாய் இராதீர்கள்; வதந்திப் பேச்சில் ஆனந்தம் கொள்ளாதீர்கள். வதந்திக்கு உங்களை அர்ப்பணித்து விடாதீர்கள்.
தீ. நி.

### வயது

இளவயதாயிருந்தாலும், புத்த தர்மத்தில் முயன்று ஈடுபட்ட பிக்ஷு, மேகத்திலிருந்து விடுபட்ட நிலா இரவுக்கு ஒளி தருவது போல, இந்த உலகில் ஒளியேற்றுகிறான்.
த. ப. 381

### வாசனை

சந்தனம், தகரப் பூ, தாமரைப் பூ, வாசிகிப் பூ முதலானவற்றின் பல ரகமான வாசனைகளின் மத்தியிலே, நல்ல பண்பின் வாசனைதான் ஈடு இணையற்றது.
த. ப. 55

### வாதத் திறமை

மதத் துறவிகளில் சிலர் வாதம் செய்வதற்குரிய வல்லமை பெற முயல்கிறார்கள். அவர்களின் மனம்

சிறுமையானவை. இவர்களை நான் பாராட்டுவதில்லை.

வாழ்க்கை

வெட்கமற்ற காக்கையைப் போலத் துணிச்சலுடையவனுக்கும், வம்பு பேசுபவனுக்கும், புறங்கூறுபவனுக்கும், முரடனுக்கும், கயவனுக்கும் வாழ்க்கையானது வெகு சுலபமாகவே தோன்றுகிறது.

த. ப. 244

ஆனால், வெட்கமுள்ளவனுக்கும், நல்ல வழியில் நாட்டமுள்ளவனுக்கும், சுயநலமில்லாதவனுக்கும் மமதையற்றவனுக்கும், தூய்மையுள்ளவனுக்கும் வாழ்க்கையானது மிகக் கடினமாகவே தோன்றுகிறது.
த. ப. 245

உன்னதமான அறநெறியைக் கண்டறியாமல் ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட, அந்த நெறியைக் கண்டறிந்தவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.
த. ப.-115

அழிவற்ற இடமான அமுத நிலையை அறியாமல் ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட, அந்த அழிவற்ற நிலையை அறிந்தவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.
த. ப. 14

துவக்கத்தையும் முடிவையும் காணமல் ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட, துவக்கத்தையும்

முடிவையும் கண்டறிந்தவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது. த. ப. 113

சோம்பேறித்தனத்துடன் பலஹீனமாக ஒருவன் நூறு வருஷங்கள் வாழ்வதைவிட, உறுதியான பலத்துடன் ஊக்கமாக ஒருவன் ஒரே நாள் வாழும் வாழ்க்கையே மேலானது. த. ப.112

புலனடக்கமில்லாமல் தீச்செயல் புரிபவன் நாட்டின் தர்மத்தால் உயிர்வாழ்வதைவிட, தீக்கொழுந்து போன்ற பழுக்கக்காய்ந்த இரும்புருண்டையை அள்ளி விழுங்குவது எவ்வளவோ மேலானதாகும்.

த. ப. 308

பலவிதமான ஜனனம் மரணம் என்ற வட்டத்தினூடே ஓடினேன். இந்த (உடலாகிய) வீட்டைக் கட்டியவனை நான் இரவு பகலாகத் 'தேடியும் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. வாழ்க்கையின் நீரோடை, ஜனனம் மரணம், ஜனனம் என்றே செல்வது; துக்கம் நிறைந்தது. த. ப. 153

விசுத்தி மார்க்கம்

'உண்டாக்கப்பட்ட அனைத்தும் அழிவுறும்'— இதைக் கண்டுணர்ந்தவன் துன்பத்திலும் அமைதியாகவே இருக்கிறான். இதுதான் தூய்மைக்கு வழி. (விசுத்திமார்க்கம்). த. ப. 277

### விடுதலை

மனம் எந்தப் புறமும் விடுதலையடைந்து விட்டால், நீ ஜனனமரணத்தை மறுபடி காணமாட்டாய்.

த. ப. 348

### விரதங்கள்

[புத்தரிடம் தருமோபதேசம் பெறுவதற்குப் பட்டினியிருத்தல் முதலான விரதங்கள் வேண்டியதில்லை.]

### விருப்பு வெறுப்பு

ஓ, பிக்ஷுக்களே! வெண்பனி நிறவஸ்ஸிகைச் செடியும் மல்லிகைச்செடியும் இன்று புதுமொட்டுகள் விட்டு. நேற்றைய உலர்ந்த பூக்களைக் கீழே உதிர்த்துவிடுவதுபோல, உங்களுடைய விருப்பு வெறுப்புகளையும் உதிர்த்துவிடுங்கள்.

த. ப.-377

### விலங்குகள்

ஆசையும் துவேஷமும் இல்லாதவனுக்கு விலங்குகள் இல்லை.

த. ப. 211

### வீரம்

வீரத்துடன் வெள்ளத்தை எதிர்த்து நில்; ஆசைகளை விரட்டிவிடு.

த. ப. 338

வெட்கம்

வெட்கப்பட வேண்டாதவற்றிற்கு வெட்கப்படுபவர்கள்; வெட்கப்பட வேண்டியவற்றிற்கு வெட்கப்படாதவர்கள்-இத்தகைய மனிதர்கள் தவறான கொள்கைகளைத் தழுவி தீயபாதையில் செல்கிறார்கள்.
த. ப. 316

வெல்ல வழி

கோபத்தை நயத்தால் வெல்லவேண்டும்; தீமையை நன்மையால் வெல்லவேண்டும்; கருமியை ஈகையால் வெல்ல வேண்டும்; பொய்யனை உண்மையால் வெல்லவேண்டும்.
த. ப. 223

வெல்லுதல்

இந்த உடல் மண்பாண்டம்போல உடையக்கூடியது என்பதை உணர்ந்து மனச்சித்தத்தை ஒரு கோட்டைபோல் உறுதியாகக்கொண்டு ஒருவன் அறிவு என்னும் ஆயுதத்தால் மாரனை எதிர்த்து வெல்லவேண்டும். வென்ற பிறகுங்கூடக் கவனமாயிருந்து வென்றதைக் காக்கவேண்டும். ஓய்ந்து விடவேகூடாது.
த, ப. 40

வெற்றி

ஒருவன் யுத்தத்தில் ஆயிரம் மனிதர்களை ஆயிரம் தடவைகள் வெல்கிறான்; இன்னொருவனோ தன்னைத்

தானே அடக்கி வெற்றிகொள்கிறான். இவர்களுள் தன்னை வென்றவனே வெற்றியாளர்களில் அதி உன்னதமானவன்.

த. ப. 103

பிறரையெல்லாம் வெல்வதைவிடத் தன்னைத் தானே வென்றுகொள்வதே மேலானது.

'தான்' என்பதை மறைந்தோடச் செய்து எப்போதும் அடக்கத்துடன் வாழ்பவனின் வெற்றியைக் கடவுளோ, கந்தர்வனோ, பிரும்மாவின் துணைபெற்ற மாரனோ தோல்வியுறச் செய்யவே முடியாது!

த. ப.—104,105

### வெற்றி தோல்வி

வெற்றி துவேஷத்தைத்தான் வளர்க்கும்; தோல்வியடைந்தவர்கள் துயரத்தில்தான் வாழ்வார்கள். வெற்றியையும் தோல்வியையும் விரும்பாதவன் தான் ஆனந்தமும் அமைதியும் பெறுகிறான்.

த. ப. 201

### வேதங்கள்

[வேதங்களே தெய்வமெனக் கொண்டாடுவதினால் பயனில்லை என்பது புத்தரின் கருத்து]

### வேலைக்காரர்

வேலைக்காரர்களுக்கு, அவர்களின் சக்திக்குத் தகுந்த வேலை கொடுக்க வேண்டும்; தகுந்த கூலியும்

உணவும் கொடுக்க வேண்டும்; வியாதியால் வாடும் காலத்தில் சிகிச்சை செய்யவேண்டும்; (இருந்தால்) உபரியான தின்பண்டங்கள் கொடுக்கவேண்டும்: உரியவேளைகளில் விடுமுறை நாட்கள் கொடுக்க வேண்டும்.
தீ. நி. iii

வேள்வி

இந்த உலகில் ஒருவன் புண்ணியம் பெறுவதற்காக வருஷம் முழுவதும் எத்தகைய வேள்வி செய்தாலும், அறநெறி வாய்ந்த ஒருவரை மதித்துப் போற்றுவதில் நாலில் ஒரு பங்குக்குக்கூட அது ஈடாகாது.
த. ப. 108

வனாந்திரத்தில் நூறு வருஷங்கள் வரை வேள்வித் தீயை வழிபட்டு வருபவன், தம்மைத் தாமே அடக்கிக் கொண்டு மெய்யறிவில் நிலையூன்றிய ஒருவரை ஒரே ஒரு கணம் வணங்குவானாகில், அந்த ஒரு வணக்கமே நூறு வருஷத்திய அக்கினி பூஜையை விட மேலானது.
த. ப. 107

[பசுக்களையும் பிராணிகளையும் உயிர்ப்பலியிடும் வேள்விச் சடங்குகளினால் பாபம் சம்பவிக்குமே தவிர, புண்ணியம் கிடைத்து விடாது என்பது புத்தரின் கருத்து]

வைத்தியன்

பயனற்ற வைத்தியன் :– தர்மசிந்தனை இல்லாமல்

பணத்தாசைக்காக நோயாளிக்குச் சிகிச்சை செய்பவன்.

வைராக்கியம்

நற்பண்புகளில் ஆசை வெறியற்ற வைராக்கியமே சிறந்தது. த. ப. 273

"எனக்கு விடுதலை நிச்சயம். இதுதான் என் கடைசிப் பிறவி. இனிமேல் எனக்கு மறுஜனனம் கிடையாது." ம. நி. i -166

புத்தம் சரணம் கச்சாமி !
தர்மம் சரணம் கச்சாமி !
சங்கம் சரணம் கச்சாமி !

பின் சேர்க்கை:

## பௌத்தமதத் தத்துவம்

பௌத்த மதத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளப் பின் வரும் குறிப்புகள் ஓரளவு உதவக்கூடும். பௌத்த மதத் தத்துவத்தின் பொதுவான கூற்றுகளுக்குக் கீழே சுருக்கமாக விளக்கங்கள் தரப்படுகின்றன.

மனிதனுக்குப் பிறப்பு இறப்பு ஏற்படுவதின் காரணம் பன்னிரண்டு சார்புகளை உடையது. பௌத்த மதத் தத்துவத்திலுள்ள பன்னிரண்டு நிதானங்களைத் தான் (நிதானம்—காரணம்) தமிழில் பன்னிரு சார்புகள் என்பார்கள். அவையாவன:

1. பேதமை. 2. செய்கை. 3. உணர்வு. 4. அருவுரு 5. வாயில். 6. ஊறு. 7. நுகர்வு. 8. வேட்கை. 9. பற்று. 10. பவம். 11. தோற்றம். 12. வினைப்பயன்.

இந்தப் பன்னிரு சார்புகளை அறுத்தால், பிறப்பு இறப்பு நீங்கி, நிர்வாண நிலை எனும் வீடு பேற்றினைப் பெறலாம்.

"பேதமை சார்வாச் செய்கை யாகும்.
செய்கை சார்வா உணர்ச்சி யாகும்.
உணர்ச்சி சார்வா அருவுரு ஆகும்
அருவுரு சார்வா வாயில் ஆகும்
வாயில் சார்வா ஊறு ஆகும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சி ஆகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கை ஆகும்
வேட்கை சார்ந்து பற்று ஆகும்மே
பற்றில் தோன்றும் கருமத்தொகுதி
கருமத்தொகுதி காரணமாக
வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப் பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலை கையாறு எனத்
தவலில் துன்பந் தலைவரும் என்ப."

—(மணிமேகலை: 30: 104-118)

இந்தப் பன்னிரண்டு சார்புகளையும் அறுத்தால் பிறவாமையாகிய இன்பப்பேறு உண்டாகும். அவற்றிற்குறிய காரணம்:

"பேதமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள அருவுரு மீளும்

அருவுரு மீள வாயில் மீளும்
வாயில் மீள ஊறு மீளும்
ஊறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்றும் மீளும்
பற்று மீளக் கருமத்தொகுதி
மீளும், கருமத்தொகுதி மீளத்
தோற்றம் மீளும் தோற்றம் மீளப்
பிறப்பு மீளும், பிறப்புப் பிணிமூப்புச்
"சாக்காடு அவலம் அரற்றுக் கவலை"
கையாறு என்றிக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும் இவ்வகையான் மீட்சி.

—(மணிமேகலை 30: 119-133)

இந்தச் சார்புகளை (நிதானங்களை அல்லது காரணங்களை) ஊழின் வட்டம் என்பார்கள் பௌத்தர்கள். இந்த ஊழ் வட்டத்தின் உறுப்புகளாவன: சந்தி, கண்டம்; காலம்; குற்றம்; வினை; பயன்; நோய் காரணம் முதலியன.

இந்தச் சார்புகளை அறுத்து நிர்வாணம் என்னும் வீடுபேறு அடைவதற்கு மனிதன் அறியவேண்டிய நான்கு உண்மைகள் அல்லது சத்தியங்களாவன:

1. துக்கம் (நோய்) 2. துக்க காரணம் [நோய் காரணம்] 3. துக்க நிவாரணம் [நோய் நீக்கும்வாய்]

4. துக்க நிவாரண மார்கம் (நோய் நீங்கிய நிவாரண நிலை) [இவற்றைப் பற்றி பொன்மொழிகளில் அவ்வவ் தலைப்புக்களின் கீழ் காண்க.]

இந்த நிவாரண நிலை பெறுவதற்கு வழி அஷ்டாங்க மார்க்கம் ஆகும். (அஷ்டாங்க மார்க்கத்தின் விளக்கத்திற்குப் பொன்மொழிகளில் அந்தந்த தலைப்பின் கீழ் காண்க.)

இந்த அஷ்டாங்க மார்க்கத்தில் அடங்குபவை மூன்று: 1. சீலம் [ஒழுக்கம்] 2. சமாதி [தியானம்] 3. பஞ்ஞா [ஞானம்]

சீலம் என்பது பஞ்ச சீலம் (ஐந்து ஒழுக்கங்கள்) எனப்படும். அவையாவன :

(1) எந்த உயிரையும் கொல்லாமலும் அதற்குத் தீங்கு செய்யாமலும் இருப்பதோடு அதனிடம் அன்பாகவும் இருப்பது.

(2) பிறர் பொருளை விரும்பாமலும் திருடாமலும் இருப்பது.

(3) கற்புடன் ஒழுக்கம் தவறாது ஆண்பெண் இன்பம் அனுபவிப்பது—முறைகெட்ட மோக ஈடுபாடுகளை நீக்குவது.

(4) உண்மையையே பேசுவது; பொய்யை நீக்குவது

(5) மயக்கத்தையும் சோம்பேறித் தனத்தையும் உண்டாக்கும் மதுபான வகைகளை நீக்கிவிடுவது.

இவை ஐந்து ஒழுக்கங்களும் இல்லறத்தாருக்கு உரியவை. இவற்றோடு,

(6) இரவில் தூய்மையான ஆகாரத்தை அளவோடு மிதமாக உண்பது.

(7) பூ, சந்தனம், வாசனைச் சுண்ணம், எண்ணெய் முதலான நறு மணங்களை மோகிக்காதிருப்பது.

(8) பஞ்சணை கட்டில் முதலானவற்றை நீக்கிவிட்டுத் தரை மீது பாய் விரித்து உறங்குவது.

—இவை மூன்றும் சேர்ந்து அஷ்ட சீலம் எனப்படும். இவை இல்லறத்தாரில் சற்று உயர் நிலை அடைந்தவர் அனுசரிக்க வேண்டிய எட்டு ஒழுக்கங்களாகும். இவை அஷ்ட சீலம் எனப்படும்

இவற்றோடு,

(9) இசைப் பாட்டு, கூத்து நடனம் முதலானவற்றைக் காணாதிருப்பது.

(10) பொன், வெள்ளி முதலானவற்றைத் தொடா திருப்பது.

—இவை இரண்டும் சேர்ந்து தசசீலம் எனப்படும்.

இவை, பௌத்த பிக்ஷுக்களான துறவிகள் அனுசரிக்க வேண்டிய பத்து ஒழுக்கங்களாகும்.

பௌத்த பிக்ஷு முற்றிலும் ஆண் பெண் இன்ப ஈடுபாட்டைத் துறந்து, உலகப் பற்றுகளையெல்லாம் நீக்கி, அடக்கமாய் வாழ வேண்டும்.

சமாதி (தியானம்)என்பது: மனிதன் எண்ணங்களை நீக்கி மனதை ஒருமுகப் படுத்தி நிலை நிறுத்துவதே (Concentration) சமாதி அல்லது தியானம் ஆகும். இதனால்; கண், மெய், வாய், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களினாலும் உண்டாகும் ஆசையாதிகளும், கோபம், குரோதம், ஐயம், மறதி அடக்க மின்மை முதலானவைகளும் வகையற்று நீங்கிப் போய், மனம் அமைதி நிலை பெறுகிறது; சாந்தி பிறக்கிறது—இது தசசீலங்களில் ஒழுகுகிற துறவிகள் கைக்கொள்ள வேண்டிய சமாதி நிலை ஆகும்!

பஞ்ஞா என்னும் ஞான நிலை என்பது நுண்ணறிவு ஆகும். தியானமாகிய சமாதி நிலையில் இருப்பதினால் துறவிக்குத் தீய எண்ணங்களும் ஆசைகளும் உணர்ச்சிகளும் செயலற்று அடங்கிக் கிடக்கின்றன என்றாலும், அவை திடீரென எப்போதாவது கிளம்பியெழக்கூடும். அப்போது அவை எழும்பிச் செயல் வடிவில் வெளிப்படாதவாறு அவற்றை நுண்ணறிவினால் அழித்து விட வேண்டும். நுண்ணறிவு என்பது பொருள்களை உள்ளது உள்ளவாறு அறியும் அறிவுப் பக்குவமாகும். இத்தகைய பஞ்ஞா எனும் ஞானநிலை அடைந்தவர்

தான் உலகத்தின் உண்மையான நிலையை ஊடுருவிக் காண்பவராவார்!

பௌத்த மதத்தின் வேதத்திற்குத் திரிபிடகம் என்று பெயர். திரிபிடகம் என்றால் மூன்று கூடை என்று பொருள். அதாவது, மூன்று வகுப்புகளை உடைய தொகுப்பு நூல்களாகும்.

திரிபிடகம்— 1. வினய பிடகம், 2. சூத்திர பிடகம்.

3. அபிதம்ம பிடகம்.

1. வினய பிடகம்: இரண்டு உட்பிரிகளை உடையது; அவையாவன: [1] வினய பிடகம்; [2] பாதி மோக்கம்

2. சூத்திர பிடகம்: ஐந்து பிரிவுகளை உடையது. அவையாவன: [1] தீக நிகாய. [2]மஜ்ஜிம நிகாய' [3] ஸம்யுக்த நிகாய. [4] அங்குத்தர நிகாய. [5] குட்டக நிகாய [குட்டக நிகாயம் என்பது தம்மபதம் முதலான பதினைந்து உட்பிரிவுகளை உடையது.]

3. அபிதம்ம பிடகம்: ஏழு உட்பிரிவுகளை உடையது.

புத்தர் மறைந்த பிறகு, பல ஆண்டுகளுக்குப் பிறகு, மௌத்த மதத்தில் பல பிளவுகள் ஏற்பட்டன. பௌத்த யாத்திலுள்ள முக்கியமான இரு பிரிவுகள்—ஈனயானம் என்பதும் மகாயானம் என்பதும் ஆகும்.

புத்தர் பிரானின் பழைய கொள்கைகளைக் கடைப்பிடிப்பது தேரவாத பௌத்தம் அல்லது ஈனயான பௌத்தம் ஆகும். திரிபிடகத்திலுள்ள சில பகுதிகளைத்

தள்ளியும், புத்தர் கூறாத வேறு பல கருத்துக்களையும் புதிய பழக்க வழக்கங்களையும் சடங்குகளையும் புகுத்தி நூல்களைச் சம்ஸ்கிருதத்தில் எழுதியமைத்துக் கொண்டு வேறு சிலர் மகாயான பௌத்த மதத்தை உண்டாக்கி விட்டனர்.

பௌத்தமதம் கூறும் பத்துச் சீலங்களோடு, தன் மதமே உயர்ந்தது என்ற இறுமாப்புடன் பிறமதங்களை தாழ்த்தாதிருப்பதும் ஒரு சீலமாகவே கருதப்படுகிறது. இதனைக் காணும் போது பௌத்த மதத்தின் பெருந் தன்மை நம் நெஞ்சைக் கவராமலிராது. 'புத்தர் காட்டிய அன்பு வழிதான் உலகிற்குத் தேவையானது' என்பதும் தெரியவரும்!



## சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனைகளும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன் மொழிகளும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.

1. டார்வின் ஜெகசிற்பியன் இரண்டாம் பதிப்பு
2. பிளேட்டோ அரு. ராமநாதன் இரண்டாம் பதிப்பு
3. கார்ல் மார்க்ஸ் ரா. தணலன்
4. ரூஸோ கோமேதக வேலு
5. பெஞ்சமின் பிராங்ளின் அரு. ராமநாதன்—மார்க்கரெட் கஸின்ஸ்
6. அரிஸ்டாடில் கிருஷ்ணன் பாலா

ஒவ்வொன்றும் விலை ரூ. 1—4—0

## துப்பறியும் நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கல்நெஞ்சன் | சிரஞ்சீவி | 1 | 8 | 0 |
| 2. | சவப்பெட்டி | ,, | 1 | 8 | 0 |
| 3. | மர்ம மனைவி | உமாகாந்தன் | 1 | 8 | 0 |
| 4. | ரயிலைத் திருடியவள். | மேதாவி | 1 | 8 | 0 |
| 5. | மலையாளச் சீட்டின் மர்மம் | ,, | 1 | 8 | 0 |
| 6. | பச்சை மாளிகை மர்மம் | ,, | 1 | 4 | 0 |
| 7. | சூரக்கோட்டை மர்மம் | ,, | 1 | 8 | 0 |
| 8. | மாயமனிதர்கள் | ,, | 1 | 4 | 0 |
| 9. | துப்பறியும் ராஜு | ,, | 1 | 0 | 0 |
| 10. | துப்பறியும் காதலி | ,, | 1 | 8 | 0 |
| 11. | கொலைப்பித்தன் | வேலவன் | 1 | 4 | 0 |

### இரண்டாம் பதிப்புகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | ரத்தப்பசி | சிரஞ்சீவி | 1 | 4 | 0 |
| 13. | பேய்வீடு | ,, | 1 | 8 | 0 |
| 14. | காதலன் கொலைவழக்கு | ,, | 1 | 4 | 0 |
| 15. | நீதிமயக்கம் | ,, | 1 | 0 | 0 |
| 16. | மர்மத்தீவு | ,, | 1 | 4 | 0 |
| 17. | இரட்டைக்கொலை | ஜெகசிற்பியன் | 1 | 4 | 0 |
| 18. | ரகசிய அறை | மேதாவி | 1 | 8 | 0 |

### நான்காம் பதிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | மர்மக்கொலை | சிரஞ்சீவி | 1 | 0 | 0 |

## அரு. ராமநாதனின் கதைக் களஞ்சியங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கதாநாயகி | 1 | 4 | 0 |
| 2. | அம்பிகாபதி | 1 | 4 | 0 |
| 3. | மஞ்சுரஞ்சிதம் | 1 | 8 | 0 |
| 4. | பழையனூர் நீலி | 1 | 4 | 0 |
| 5. | கோழிப்பந்தயம் | 1 | 4 | 0 |
| 6. | வேதாளம் சொன்ன கதைகள் | 1 | 4 | 0 |
| 7. | இராஜராஜ சோழன் (சரித்திர நாடகம்) | 2 | 4 | 0 |

## பொன் மொழிகள் வரிசை

1. புத்தர். 2. விவேக சிந்தாமணி. 3. பைபிள் 4. திருக் குர் ஆன் 5. பஞ்சதந்திரம். 6. ஔவையார். 7. சங்கரர்.

ஒவ்வொன்றும் விலை அணா எட்டு

## நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சிலந்திக்கூடு | தங்கமணி எழுதிய பாலர் நாவல் | 1 | 0 | 0 |
| 2. | ஒற்றைக் கண்ணன் | | 1 | 0 | 0 |
| 3. | நாநாவின் தாய் | எமிலிஜோலா | 4 | 0 | 0 |
| 4. | எதிர்வீட்டு ஜன்னல் | கோ. த. சண்முகசுந்தரம் | 1 | 0 | 0 |
| 5. | உறவுமுள் | ஜெகசிற்பியன் | 0 | 12 | 0 |
| 6. | ஆசைவெள்ளம் | சுகி | 0 | 12 | 0 |

# ஆராய்ச்சி நூல்கள்

1. இலாகிரிப் பொருள்களா, எமதூதர்களா?
   சு. அ. ராமசாமிப் புலவர் ரூ. 1 8 0

2. ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?
   பி. எஸ். ராமையா ரூ. 1 8 0

3. நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?
   'கார்த்திகேயன்' ரூ. 1 8 0

4. மேடையில் பேசுவது எப்படி?
   டி. எம். காளியப்பா, எம். ஏ. ரூ. 1 8 0

5. புது மணத் தம்பதிகளுக்கு
   'இளவேனில்' ரூ. 2 4 0

6. பறக்கும் தட்டு 'சிரஞ்சீவி' ரூ. 2 0 0

பிரேமா பிரசுரம் :: சென்னை-24




PREMA ART PRINTERS, MADRAS-24